11

# ஒப்பந்தம் செய்து ஏமாற்றும் தந்திரங்களுக்கு இனி இடமில்லை

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 41
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 10 முஹர்ரம் 14 திங்கட்கிழமை [23-3-70]

புதுவருட மலிவு விற்பனை

23-3-70 தொடக்கம் 13-4-70 வரை
உங்கள் பண்டிகையைச்
சிறந்த முறையில் சிக்கனமாகக்
கொண்டாட விஜயம் செய்யுங்கள்

சாறிஎம்போறியம்
(சேலைவகைகளுக்குப் பிரதானமானவர்கள்)
124, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 418. தந்தி: சாறீஸ்
2004

## தமிழரசு வாலிபமுன்னணி மாநில மாநாடு தீர்மானம்

மட்டக்களப்பு, ஞாயிறு

தேர்தல் முடிந்ததும், தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்புத்தருவதாகக் கூறி ஒப்பந்தம் செய்துகொண்டு பின்னர்ஏமாற்றி விடும் சிங்களக் கட்சிகளின் தந்திரத்துக்கு இனிமேலும் தமிழரசுக் கட்சி இடம் கொடுக்கக்கூடாதெனக் கோரும் தீர்மானம் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசு வாலிபமுன்னணியின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

முன்னணியின் 12வது மாநில மாநாட்டின் ஓரம்சமாகப் பாட்டாளிபுரத்தில் அண்ணா அரங்கில் இன்று காலை நடைபெற்ற முன்னணியின் அரசியல் மகாநாட்டில் சம்பிரதாயபூர்வமாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மூன்று தினங்கள் நடைபெறும் இம்மாநிலமகாநாடு இன்றுடன் முடிவடைகின்றது.

சமஷ்டி ஆட்சி அமைப்பு, தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து, தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத் தடுப்பு, இலங்கையில் வாழும் இந்தியவழிப் பிரஜைகளுக்குப் பிரஜாவுரிமை ஆகிய கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்காகத் திட்டங்கள் தயாரித்துப் போராடவும் திருமலையில் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவவும் கட்சி பாடுபட வேண்டுமென்றும் கோரும் வேறிரு தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

பிற்பகலில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு மாமாங்கத்திலிருந்து திரள் திரளாக மக்கள் ஊர்வலமாகவந்தடைந்தனர். அலங்கார வண்டிகளும், கரகம் மற்றும் காவடி ஆட்டங்களும் ஊர்வலத்தில் இடம் பெற்றன. தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், கட்சித் தலைவர் திரு எஸ் எம் இராசமாணிக்கம், பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் உட்பட முன்னணிப் பிரமுகர்களும் திரு இராசமாணிக்கம், திரு அமிர்தலிங்கம், திரு இராசதுரை எம் பிக்கள் ஆகியோர் நகரமண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்

நகரமண்டப முன்றலில் மங்கள வாத்தியங்கள் முழங்க, கட்சிக்கொடியை திரு எஸ் ஜே வி செல்வநாயகம் ஏற்றிவைத்தார். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழரசுக் கீதம் பாடினார்.

பொதுநிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன் பாலைதீவு படகு விபத்தில் பரிதாபமாக மாண்டவர்களுக்கு மௌன அஞ்சலிசெலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு முதலாவது எம் பி திரு செ இராசதுரை தமது ஆரம்ப உரையில் குறிப்பிட்டதாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சிதறிக்கிடந்து பல்வேறு கோணங்களில் சென்று கொண்டிருந்த தமிழ்பேசும் மக்களை ஒன்றுபடுத்தி அவர்களிடையே விடுதலை வேட்கையை உண்டாக்கியது தமிழரசுக்கட்சியே என்றும், தமிழரசுக்கட்சிதான் இந்நாட்டின் தமிழ்பேசும் இனவிடுதலை இயக்கத்தின் முதுகெலும்பென்றும் இது கட்சியின் மிகப் பெரிய சாதனையென்றும், தமிழ் இளைஞர்கள் தமது எதிர்கால சுபிட்சம் கருதி வடக்கு, கிழக்கு மாகாணங்களைப்பாதுகாத்து அவற்றைப் பொன்விளையும் பூமியாக்க வேண்டுமென்றும் சொன்னார்.

முன்னணியின் விஷய...

# வேலைநிறுத்தம் முடிந்தது; இன்று வட பகுதி பஸ் சேவை சீராகும்

## பஸ்ஊழியர்தாக்கப்பட்டது பற்றி விசாரிக்க வாக்குறுதி

### சாரதி கொலைபற்றி விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி இ. போ. சபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்று நண்பகலுடன் முடிவடைந்தது. ஆனாலும் இன்று காலைதான் பஸ் சேவை சீராகுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வெள்ளிக்கிழமை இரவு கொடிகாமம் பஸ் நிலையத்தில் இ. போ. சபைச் சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பஸ் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்

சுட்டுக்கொல்லப்பட்ட ஐயா என்றழைக்கப்படும் வேலுவின் இறுதிச்சடங்குகள் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றன. இதில் இ. போ சபை ஊழியர்களும் ... படுகிறார்களென்றும் பஸ் ஊழியர்களுக்குப் பாதுகாப்பளிப்பதுடன் கொடிகாமத்தில் பஸ் கண்டக்டர் தாக்கப்பட்டதுபற்றியும் இதற்கு முன்னர் நடந்த தாக்குதல் ...

#### விசாரணை நீடிக்கிறது

கொடிகாமம் பஸ்நிலையத்தில் பஸ் சாரதி வேலு சுட்டுக்கொல்லப்பட்டது சம்பந்...

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை யூனியன்கள்

## அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்வர்?

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறைசிமெந்து தொழிற்சாலை யூனியன்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளவிருக்கின்றன.

காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலை பொதுத் தொழிலாளர் யூனியன் 25 கோரிக்கைகள் கொண்ட மகஜரொன்றை 21 நாள் காலக்கெடுவுடன் கைத்தொழில் அமைச்சருக்கு அனுப்பியிருந்தும் அவர் இதுகாலவரை எதுவித பதிலும் அனுப்பாததாலேயே ...வர்கள் அடையாளவேலைநிறுத்தம் மேற்கொள்ளக் காரணமெனத் தெரிகிறது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை சகல தொழிற்சங்கங்களும் கலந்து கொள்ளும் இவ்வேலைநிறுத்தத்தில் கேற்கீப்பர்கள் பாதுகாவலர்கள் கன்ரீன் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளமாட்டார்கள் எனவும் நம்பப்படுகிறது

வேலைநிறுத்தத்தின்போது எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாதிருப்பதற்காக பொலிஸ் பந்தோபஸ்து போடப்பட இருக்கிறது.

## யாழ். மக்களுக்கு நன்றி

திருக்கோணமலை, திங்,

பன்றித்தலைச்சி அம்மன் கோவில் உற்சவத்தின்போது தாழ்த்தப்பட்டோருக்கு சம உரிமை வழங்கியதையிட்டு யாழ்ப்பாண மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமொன்றை திருமலை மறுமலர்ச்சித் தமிழ் மன்றம் நிறைவேற்றியுள்ளது. தலைவர் ந. சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேறியது.

.........

புத்தூர், ஞாயிறு

ஆவரங்கால சர்வோதய விளையாட்டுக் கழகத்தின் ... வருட நிர்வாகிகளாக ...வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செ தேவதாசன், செயலாளர்: க இரவியம், பொருளாளர்: சி கந்தையா. 21 பேர் கொண்ட நிர்வாக ...வும் தெரிவு செய்யப்...

## “தந்து நிறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுக்கொல்லப்பட்ட ஜயா என்றழைக்கப்படும் வேலுவின் இறுதிச்சடங்குகள் நேற்றுப் பிற்பகல் நடை பெற்றன. இதில் இ போ சபை ஊழியர்களும் மற்றும் பலரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்

சூட்டுச் சம்பவம் நடந்ததும ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸ் அதிகா ஒருவர் பஸ் கண்டக்டரைத்தாக்கியதாகவும் இதுபற்றி சரியான விசாரணை நடைபெற வேண்டும்என்றும்கோரி இ போ ச ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்

இவ்வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவருவதற்காக பஸ் ஊழியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இ போ சபை அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட முத்தரப்பு மகாநாடொன்று நடைபெற்றது

பஸ் ஊழியர்கள் பொலிசாரால் அடிக்கடி தாக்கப்படுகிறார்களென்றும் பஸ் ஊழியர்களுக்குப் பாதுகாப்பளிப்பதுடன் கொடிகாமத்தில் பஸ் கண்டக்டர் தாக்கப்பட்டதுபற்றியும் இதற்கு முன்னர் நடந்த தாக்குதல் பற்றியும் பூரண விசாரணை நடத்தி அந்த அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் கூறினர்

விசாரணை நடத்தப்படுமென்றும் குற்றம் செய்தோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் உதவிப் பொலிஸ் சுப்ரின்டெண்ட் திரு. சில்வா உறுதியளித்ததைத் தொடர்ந்து பஸ்ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட ஒப்புக்கொண்டனர்

நேற்றுக் காலையில் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட பருத்தித்துறை டிப்போ ஊழியர்களும் நேற்று மாலையில் வேலைக்குத் திரும்பினர்

## விசாரணை நீடிக்கிறது

கொடிகாமம் பஸ்நிலையத்தில் பஸ் சாரதி வேலு சுட்டுக்கொல்லப்பட்டது சம்பந்தமாகப் பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர். இக்கொலைக்கு இன்னும் சரியான காரணம்தெரியவில்லையாயினும் அரசியலும் இதற்கொரு காரணமாக இருக்கலாமென்பதை நிராகரிக்க முடியாதென்று பொலிஸ் அதிகாரி ஒருவர் சொன்னார்

சாயிகச்சேரிப் பகுதியில் பொலிஸ் ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த மாதத்திலிருந்து அங்கு புதிய இன்ஸ்பெக்டர் ஒருவர் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்படவிருக்கிறார், பொலிசாரின் தொகையும் அங்கு அதிகரிக்கப்படவிருக்கிறது

# 12 மைல் நீள மரண ஊர்வலம்

## எம். பி. க்களும் கலந்துள்ளனர்

மட்டுவில், திங்கள்

கொலை செய்யப்பட்ட வேலுவின் இறுதிச்சடங்கு நேற்றுமாலை நடைபெற்றது இதில் காங்கேசன்துறை எம் பி திரு எஸ் ஜே வி செல்வநாயகம், பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம், உடுவில் எம்.பி.திரு, தர்மலிங்கம். சாவகச்சேரி எம்.பி. திரு வ. ந. நவரத்தினம், திரு ஆலாலசுந்தரம் மற்றும் தமிழரசு மாதர் முன்னணித்தலைவிகளும் வடபிராந்திய இ பா ச ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

கச்சாயிலுள்ள காலஞ்சென்றவரின் வீட்டிலிருந்து புறப்பட்ட இறுதிச்சடங்கு ஊர்வலம் கொடிகாமம்சாவகச்சேரி ஊடாகச் சென்று கோயில்குடியிருப்புவழியாக திரும்பவும் கச்சாயை வந்தடைந்தது' சுமார் 12 மைல் தூரம்வரை வீதிகளெங்கும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சடலம் வைக்கப்பட்டிருந்த வானில் இருமருங்கிலும் தமிழரசுக் கட்சிக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சடலம் கச்சாய் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது ஈமச்சடங்கில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

### ஊர்வலத்தில் ஒலிபெருக்கி

மரணஊர்வலத்தில் வாகனத்தில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிமூலம் மரணமான ஐயாவின்சேவைகள்பற்றி எடுத்துரைத்தனர் சடலத்தின் முன்னும் பின்னும் இந்த அறிவிப்புகள் நடைபெற்றன. ஊர்வலத்தில் அதிகமான பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தனர் (மட-கொடி-நிரு)

— —

## 'அன்பு ஒரு ஆயுதம்'

உடுப்பிட்டி, ஞாயிறு

''அன்புதான் உலக மக்களை நல்வழியில் கொண்டு செல்லும் ஆயுதம். பிரம்படி மூலம் மாணவனைப் பயப்படுத்தமுடியாது. பெற்றோர் பல கஷ்டங்களுக்குஇடையே தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இதனை உணர்ந்து மாணவர்கள் தமது பெற்றோரின் கனவை நனவாக்கவேண்டும்'' என நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து இடமாற்றலாகிச் செல்லும் ஆசிரியை செல்வி சரோஜினி தாமோதரம் பிள்ளை தமக்களிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

வால்வெள்ளி

## ஆராய்ச்சியாளர் பார்த்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த சில தினங்களாக கிழக்கு வானிலே வால் வெள்ளி ஒன்று காணப்படுகிறது இதை பிரித்தானிய அரசினர் வானியல் ஆராய்ச்சிச் சங்க அங்கத்தவரான வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வழக்கறிஞர் டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் பார்த்ததாகவும் அதை சூரியவெளிச்சம் வானிற்தோன்றும் வரை மிகவும் தெளிவாகக் காணக்கூடியதாக விருந்ததாகவும் கூறுகிறார்.

விடியும் போது ஏறக்குறைய 30 பாகை உயரத்திற் தெரிந்த அந்த வால்வெள்ளியின் வால் எல்லா வால்வெள்ளிகளையும் போல் சூரியனுக்கு எதிர்த்திசையிலே மிகவும் நீளமா அது தோன்றியதாயும் அவர் தெரிவித்தார். சரியாக காலை 4-45 மணிக்கு அவ்வால்வெள்ளி கிழக்கு வானிலே உதயமகிறதாகவும் திரு. செந்தில்நாதன் கூறினார்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 20-ம் திருவிழாவின் இன்று பகல் 11 மணிக்கு அம்மன் எழுந்தருளி முன்மண்டபத்தில் தவசு. மாலை 4-30 மணிக்கு மாலைமாற்றி திருவீதிவலம் 5-30 மணிக்கு கன்னி ஊஞ்சல். இரவு 7 மணி முதல்திருக்கல்யாணயம் வீதிவலமும் இரவு திரு. ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் நிகழும்.

லேயே ... வர்கள் அடை போடப்பட இருக்கிறது. யா ளவேலைநிறுத்தம் மேற்

# "தடுத்து நிறுத்தி வெட்டினர்கள்"

## கரவெட்டி வழக்கில் எதிரிகள் குற்றவாளிகள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த என்னை எதிரிகள் இருவரும் தடுத்துநிறுத்தி கொட்டனாலும், கத்தியாலும் தாக்கினர் தாக்கியதும் நான் விழுந்து விட்டேன்''

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான செல்லன் சிவக்கொழுந்து என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் கரவெட்டியைச் சேர்ந்த க. செல்வராசா, வை. செல்வராசா ஆகிய இருவரும் கடந்தவருடம் ஆவணி மாதம் 2-ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த செ. சிவக்கொழுந்துவுக்கு கொட்டனாலும் கத்தியாலும் வெட்டி படுகாயம் உண்டுபண்ணியதாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்டது.

சிவக்கொழுந்து தொடர்ந்து சாட்சியமளிக்கையில்:- சம்பவநாள் நான் நெல்லியடிமகாத்மா படமாளிகை றோட்டிலுள்ள ஒழுங்கையால் திரும்பி வீட்டிற்குப் போய்கொண்டிருதேன். அப்போது எதிரிகள் இருவரும் என்னை தடுத்து நிறுத்தினர். நான் நின்றதும் 1-ம் எதிரி கொட்டனால் அடிக்க 2-ம் எதிரி கத்தியால் குத்தினார். நான் சத்தம் போட்டேன் அதன் பின்னும் கொட்டனால் அடியும், கத்தியால் வெட்டும் விழுந்தது. நான் உடனே நிலத்தில் விழுந்துவிட்டேன். பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன் பொலிசாருக்கும் வாக்குமூலம் அளித்தேன்.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு நிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 28-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## போரா ஆத்மீக தலைவருக்கு யாழ். மாநகரசபை வரவேற்பு

யாழ்பபாணம், திங்கள்

யாழ்ப்பாண நகரிலுள்ள பொதுமக்களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தி அவர்களது நலஉரிமைகளுக்காக பாடுபடுவதே மாநகரசபையின் மேலான கடமை. இக்கடமையை நிறைவேற்றி இந்நகர்மக்கள் சுபீட்சமாக வாழ அல்லாவின் அருளை வேண்டுகிறேன் உலக மக்கள் அனைவரும் சமாதானமாக ஒற்றுமையாக வாழ வேண்டியதே நமதுமேலான குறிக்கோள்! அதற்கு தாபூதி அல்லாஹ் துணைபுரிவாராக'

எனது தாபூதிபோரா வகுப்பினரின் ஆத்மீகத் தலைவரான புனிதப்பெரியார் டாக்டர் செயிட்னா முகமட் புர்ஹானுடீன் சாகிப் அவர்கள் நேற்றுமாலை யாழ்ப்பாண நகரசபை அளித்த ஒரு வரவேற்புக்கு அளித்த பதிலில் குறிப்பிட்டார், அவர் அராபி மொழியில் பேசியதை ஆங்கிலத்திலும், தமிழிலும் மொழிபெயர்த்தனர்

நகரமண்டபத்தின் வாசலிலே பெரியார் அவர்களை மேயரும், நகரபிதாக்களும் வரவேற்றனர். மேயர் துரைராஜா தமிழிலும் ஆங்கிலத்திலும் வரவேற்புரை வாசித்தார். கொழும்பு மாநகரசபை நூல்நிலையத்துக்கு அவருடையதந்தையார் 5லட்சரூபா நன்கொடை-தமது சமூகத்தவர் மூலம் அளிக்கச் செய்ததை வரவேற்புரையில் பாராட்டினர் மண்டபத்தில் பல பிரமுகர்களும் தாபூதி போராத சமூகத்தவர் பலரும் வந்து வரவேற்பில் கலந்துகொண்டனர்

வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செ தேவதாசன், செயலாளர்: க திரவியம், பொருளாளர்: கி கந்தையா. 21 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

—

## மேலதிக பஸ் ஒன்றை விடுக

சுழிபுரம், சனி

பாடசாலை மாணவர்களின் நலன்கருதி மூளாயிலிருந்து பருத்தித்துறை வரையும் காலை 8 மணிக்குமேலதிக பஸ் ஒன்றை விடுமாறு கோரிக்கை விடுத்துள்ளது பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூகநிலையம் சுழிபுரம் சித்தங்கேணி, பண்டத்தரிப்பு விளான் ஆகியகிராமங்களில் இருந்து சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவமாணவிகள் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரிக்கு தினமும் தனிப்பட்ட வாகனங்கட்கு அதிக பணம் கொடுத்து போய் வருகின்றனர். இந்த பஸ் சேவை மூலம்மற்றும்பொது மக்களுக்கும் அதிகவசதி ஏற்படும் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாயகம், பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், கட்சித் தலைவர் திரு எஸ் எம் இராசமாணிக்கம், பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் உட்பட முன்னணிப் பிரமுகர்களும் மற்றும் கட்சி வேட்பாளர்களும் உரையாற்றினர்.

நேற்று நகரமண்டபத்தில் வன்னியசிங்கம் அரங்கில் பொதுநிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன் திரு எஸ் ஜே வி செல்வநாயகம்,

தமது எதிர்கால சுபீட்சம் கருதி வடக்கு, கிழக்கு மாகாணங்களைப்பாதுகாத்து அவற்றைப் பொன்விளையும் பூமியாக்க வேண்டுமென்றும் சொன்னார்.

முன்னணியின் விஷயாலோசனைக் கூட்டம் வெள்ளியன்று தமிழரசுக் கட்சியின் கிழக்குமாகாணத் தலைமை அலுவலகத்தில் இராசதுரை எம். பி. யின் தலைமையில் நடைபெற்றது.

## பதில்மனு சமர்ப்பிக்க ஏப். 18 வரை அவகாசம்

மட்டுவில், ஞாயிறு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் இவ்வருட நிர்வாகியான சின்னப்பா சிவகுரு மீது கடந்த 14-ந் திகதி பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு மீதான மனுவிசாரணை தவணைக்கு முன்பே மாவட்ட நீதவான் முன்னிலையிலும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மாவட்டநீதவானும் ஒரு மாத காலம் தவணை போட்டார்.

கடந்த 14-ம் திகதி பிறப்பிக்கப்பட்ட இந்த இடைக்காலத் தடைஉத்தரவின் மீதான மனுவிசாரணையை கடந்த 16-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு' கே. விக்னராஜா, எதிரி சிவகுருவிடம் ஒரு மனுசமர்ப்பிக்கும்படி கோரி அந்த மனுசமர்ப்பிக்க எதிரி தவணை கோரியதைத் தொடர்ந்து அவருக்கு மாஜிஸ்திரேட ஏப்ரல் 11-ம் திகதி வரை தவணைகொடுத்தது தெரிந்ததே.

இதற்கிடையில் குறிப்பிட்ட ஏப்ரல் 11ம் திகதியரன விசாரணைதினம் சாவகச்சேரி நீதிமன்றத்தின் விடுதலை நாளாதலால் இதை மாவட்டநீதிமன்றத்தில் தான் விசாரணைசெய்ய வேண்டும் என்று வழக்காளியும் கடந்த ஆண்டு ஆலய நிர்வாகியுமான மயில்வாகனம் குழந்தைவேலு என்பவர் சமர்ப்பித்த மனுவைத் தொடர்ந்து, நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதவான் திரு. ரி. எம். தர்மலிங்கம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சின்னப்பா சிவகுரு வழக்கறிஞர் திரு. வி. பாலகிருஷ்ணன். அட்வக்கேட் திரு. எஸ். நாகராஜா ஆகியோரின் அனுசரணையுடன் நீதிமன்றத்தில் ஆஜராகிவருந்தார். எதிர்தரப்பில் வழக்கறிஞர் திரு. என் கே இரவியநாரகத்தின் அனுசரணையுடன் அட்வகேட் திரு வி சுந்தரலிங்கம் ஆஜரானார்

எதிரி சிவகுரு தனது

(4-ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் பரிசளிப்பு விழாவில்

# ஈழநாட்டுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம் திங்கள்

''விளையாட்டுத் துறையில் 'ஈழநாடு' பத்திரிகை ஆற்றும் சேவை மகத்தானதானதாகும் எமது இந்தக் கிரிக்கெட் போட்டியின் நிமித்தம் 'ஈழநாடு' பத்திரிகை விசேஷ 'அனுபந்தம்' ஒன்றை வெளியிட்டு எம்மை கௌரவித்ததற்கு முதலில் எமது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.''

இவ்வாறு, சென்றதல்- சென். ஜோன்ஸ் கல்லூரிகளின் 72-வது வருடாந்த கிரிக்கெட் போட்டியின் முடிவில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில். யாழ். மத்திய கல்லூரின் அதிபர் திரு ஈ. சபாலிங்கம் தமது நன்றியுரையில் ஆயிரக்கணக்கான ரசிகர்களின் முன்னிலையில் கூறினார்.

சென் ஜோன்ஸ்கல்லூரியின் அதிபர் திரு பூரணம்பிள்ளையும் அனைவருக்கும் தமது நன்றியை தெரிவித்தார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி சபாலிங்கம் பரிசுகளை வழங்கினார்.

### மத்திய கல்லூரி வெற்றி

மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்

(4 ம் பக்கம் பார்க்க)

## காதலித்த பெண்ணை கைவிட முயன்றாராம்

### இன்ஸ்பெக்டர் சமரசம் செய்தார்

மாவிட்டபுரம், வெள்ளி

வயாவிளான் தோலகட்டி வாசியான சைவசமயத்தை சேர்ந்த ஒரு வாலிபர் அதே ஊரைச் சேர்ந்த கிறிஸ்தவ சமய இளம் பெண்ணுடன் பலகாலமாக கள்ளக்காதல் வைத்திருந்து அவர்கர்ப்பவதியானதும் காதலை துண்டிக்க நினைத்தாராம்.

அப்பெண் உடன் காங்கேசன் துறைபொலிசில்புகார் செய்ததையடுத்து இன்ஸ்பெக்டர் திரு தேவசகாயம் இருவரையும் சமாதானம் செய்து வைத்தார்.

இளைஞர் தான் சைவசமயத்தை சேர்ந்தவனென்றும் பெண்வேறு சமயத்தை சேர்ந்தவரென்றும் சீதனம் இல்லாத பெண்என்றுமகூறி அவருடன் வாழ்க்கை நடத்த மறுத்தாராம். இவ்வளவுகாலமும் அன்பாய் இருந்து விட்டு இப்பொழுது அவரைநட்டாற்றில்விட வேண்டாமென இன்ஸ்பெக்டர் எடுத்துக் கூறியதை வாலிபர் ஏற்றுக்கொண்டு திருமணம் செய்து கொள்ள இணங்கியதாகத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். ராணி சினிமாவுக்கு இரு காவலாளர்கள் தேவை உடனடியாக விண்ணப்பிக்கவும். செயலாளர், ராணி சினிமா, யாழ்ப்பாணம். 1667

தாசன் இன்டஸ்றீஸ் தயாரிப்புக்களைத் தயார் செய்வதற்கும், சைக்கிளில் சென்று வியாபாரம் செய்வதற்கும் ஆட்கள் தேவை. சொந்தச் சைக்கிள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது 23-3-70க்கு முன் நேரில் வரவும். தாசன் ஸ்ரோர்ஸ், ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். 1666

தென்னந்தோட்டம்

பழை வட்டாரத்தில் 50 ஏக்கர் ரோட் ஓரமுள்ள காய்க்கிற இளம் தென்னந்தோட்டம் தேவை. முழு விபரங்களுடன் நியாயமான விலையைக் குறிப்பிட்டுத் தொடர்புகொள்ளவும். W.M. இராசா, இராசமகால், மாணிப்பாய். 1936

VACANCY

Teacher of Arts & Crafts

Preference for qualification from Government College of Fine Arts or Ceylon Technical College. Post temporary now, with possibility of permanency after probation. Apply with testimonials (copies only) before April 15, 1970 to: The Principal, Nuffield School, Kaitadi. 1939

### வாடகைக்கு

வீடு

அலுமாரிகளும், இணைப்புகளும் கட்டப்பட்ட நாலு அறைகளுடன் மாநகரசபை தண்ணீர் விநியோகம், மற்றும் நவீன வசதிகளடங்கிய வீடு 19, சிவன்பண்ணைவீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் வாடகைக்குண்டு. மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது அதேவீதியிலுள்ள 36-ம் இலக்க வீட்டில்தொடர்புகொண்டு பார்வையிடலாம். 1941

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

அரசாங்கக் கேள்விகள்

கட்டிடங்கள் திணைக்களம்

என். 1336- வெங்கல செட்டிகுளம் பிரிவு காரியாதிகாரி அலுவலகம் கட்டுவதற்கான கேள்விகள் 1970-4-17-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்கட்கு 1970-3-20-ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும். GP 2187

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### ஏல விற்பனை

சந்தைக் கடைக் குத்தகை பாஷையூர்—1970

பாஷையூர் சந்தையிலிருக்கும் இரு கடைகள் 1-4-1970 ந் திகதி தொடக்கம் 31-12-1970-ந் திகதி வரையுள்ள காலத்திற்கு குத்தகைக்குக் கொடுக்கப்படவிருப்பதால், இதற்கான குத்தகை உரிமை மார்ச்சு மாதம் 31ந் திகதி செவ்வாய்க்கிழமை (31-3-70) காலை 10-30 மணியளவில், மேற்சொல்லப்பட்ட இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்விக்காரர் விற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் முழுக் குத்தகைப் பணத்தையும் உடனடியாகக் கொடுக்கவேண்டும். மற்றும் சபையின் விதிகளுக்கமைய இக்குத்தகைக்கான ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திடல்வேண்டும்.

மேற்கொண்டு தகவல்களை அலுவலக நேரத்தில் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-3-70 2006

### விற்பனைக்கு

போட் பிறிவற் 1 சிறி 1163 நம்பர் கார் விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் உள்ளது. மிஷன்வீடு சென்றல் பாடசாலைக்கு அருகாமை, வேம்படி ரோட் யாழ்ப்பாணம். 1940

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### ஏல விற்பனை

கருவாட்டுக்கடை

இல- 18, பெரியகடை

1-4-1970 தொடக்கம் 31-12-1970 வரை மேற்படி கருவாட்டுக்கடையைக் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமான உரிமை பிரசித்த ஏல விற்பனை மூலம், எதிர்வரும் 28-3-1970-ந் திகதி சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு சம்பந்தப்பட்ட இடத்தில் வைத்து விற்கப்படும்.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்கான கேள்வித் தொகை முழுவதையும் கேள்விக்காரர் ஏலவிற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும். மற்றும் சபையின் விதிகளுக்கமைய இக்குத்தகைக்கான ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திடல்வேண்டும்,

மேற்கொண்டு தேவைப்படும் தகவல்களை அலுவலக நேரத்தில்மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்.
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்,
மாநகராட்சி மன்ற
அலுவலகம்.
யாழ்ப்பாணம். 2005
20-3-70

## யாழ்ப்பாண மாநகரசபை

### அபாயகரமானவையும். அருவருப்பானவையுமான வியாபாரங்களுக்குரிய அனுமதிச்சிட்டு—1970

மேற்படி வியாபாரங்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களுக்காக யாழ்ப்பாண மாநகரசபையினுல் ஆக்கப்பெற்று அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெற்ற உபவிதிகளுக்கமைய 1970ம் ஆண்டிற்குரிய அனுமதிப் பத்திரத்தினை அதற்குரிய பணத்தினை மார்ச் மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக சபை அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

மேல்குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன் உத்தரவுப் பத்திரங்கள் பெறத் தவறுபவர்கள்மீது சட்டப்பிரகாரம் வழக்குத் தொடரப்படும் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஏ. ரி. சுந்தரம்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஸ்ரீசங்கர் [இருவேடங்கள்] ஹெலன் குமாரி, மஞ்சுளா நடித்த
மஞ்சள் குங்குமம்

ராஜா
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி

## உடுப்பிட்டி வட்டாரபாடசாலை மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி வட்டாரக் கனிஷ்ட பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. போட்டிமுடிவுகள் சில வருமாறு:-


13 வயது (ஆண்) 75மீட். ஓட்டம் எஸ். திருச்செல்வம், பீ பாலச்சந்திரன், ச மகேசன் (உயரம் பாய்தல்) தா. தங்கமணி, மா தவத்துரை, ச தேவகுமாரன், (நீளம் பால்தல்) எஸ் திருச்செல்வம், பீ பாலச்சந்திரன் எம். சீராளன் (4x50 யார் அஞ்சல் ஓட்டம்) வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி, துன்னாலை வடக்கு இந்து பாடசாலை, வதிரி வடக்கு இந்து பாடசாலை, வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை (4x100 யார் அஞ்சல் ஓட்டம் வதிரி தேவரையாளிஇந்து, கம்பர்மலை அரசினர் பாடசாலை, வதிரிவடக்கு மெ. மி.

பெண்கள் (75 மீட்ஓட்டம்) சி. இந்திரா கே. லோகராணி, க. மனோராணி, (100மீட்.) ஆர். மங்களேஸ்வரி, கே. லோகராணி, கா. நவரத்தினமலர் (4X40யார் அஞ்சல்) யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், நெல்லியடி மெ. மி. தேவரையாளி இந்து. (4X100யார் அஞ்சல்) துன்னாலை வடக்கு இந்து, யார்க்கருவிநாயகர் வித்தியாலயம், நெல்லியடி மெ.மி

11வயது ஆண் (50 மீட்.) பெ. விமல்புலேந்திரன், சி தெய்வேந்திரன், க. பாஸ்ரன், (75 மீட்) நா. இராசமணி, க. அகிலேஸ்வரன், பீ. செல்வானந்தன். (4X50 அஞ்சல்) யார்க்கரு விநாயகர், தேவரையாளி இந்து கம்பர்மலை அரசினர் பாடசாலை. (நின்று பாயும்அஞ்சல்) இமையாணன் அரசினர் பாடசாலை, மணியகாரன் தோட்டம் சைவப்பாடசாலை, யார்க்கருவிநாயகர் வித்தியாலயம்.

பெண்கள் (50 மீட்) சோகீதாஞ்சலி, க செல்வராணி கி மலர் (4X50 அஞ்சல்) துன்னாலைவடக்கு இந்து யாக்கரு விநாயகர், நெல்லியடி மெ மி, (நின்று பாயும் அஞ்சல்) இமையாணன் அரசினர் பாடசாலை, நெல்லியடி மெ மி. யார்க்கரு விநாய[illegible].

பார்வையாளர்கள்4X100 யார் அஞ்சல்) வளர்மதி விளையாட்[illegible] மதிவிளையாட்[illegible] தனபாலசிங்கம் விளையாட்[illegible]



கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு. எஸ். செல்வலிங்கம் லண்டனில் பி. எச்டி., டி. ஐ ஸி, முதலிய பட்டங்களைப் பெற்று இலங்கை திரும்புகிறார்.

1964-ம் ஆண்டு பொறியியல் பட்டம் பெற்ற இவர் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்து சாம்ராஜ்ய உபகாரச்சம்பளம் பெற்று உயர்கல்விக்காக 67-ம் ஆண்டு லண்டன் சென்றார். 70-ம் ஆண்டுப் பரீட்சையில் பி எச்டி; டி. ஐ. ஸி. பட்டம்பெற்று தாயகம் திரும்பும் இவர் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் இலங்கையில் முதலாவது சித்திபெற்றது குறிப்பிடத்தக்கது. இவருக்கு இப்போது வயது 25; யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அங்கு கற்கும்போது பல பரிசுகளைப்பெற்றார். இவர் கோண்டாவில் கிழக்கு அ சி செல்லத்துரை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரராவார்

## த. வா. முன்னணி நிர்வாகிகள்

வேலணை, ஞாயிறு

ஊர்காவற்றை தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றதமிழரசுக்கட்சி வாலிப முன்னணிக் கூட்டத்தின்போது பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு மு கந்தையா, துணைத் தலைவர் திரு இ. வடிவேலு செயலாளர் திரு பொ, சின்னத்துரை துணைச் செயலாளர் திரு நா. அம[illegible]ங்கம், பொருளாளர் திரு[illegible] தர்மலிங்கம். மற்றும் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் [illegible]யப்பட்டனர்.

## பிரிவுபசார விழா

உடும்பராய், திங்கள்

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையிலிருந்து ஊரெழு கணேசவித்தியாசாலைக்கு மாற்றலாகிச் சென்றுள்ள ஆசிரியர் திரு. ரி ஐயாத்துரையின் சேவையைப்பாராட்டி சடந்த வெள்ளிக்கிழமை மாலை உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் உபசார விழாவொன்று நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. சு. குமாரசேகரம் தலைமை வகித்தார்.

சிரேஷ்ட முதல் உதவி ஆசிரியை திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை திருவாளர்கள் க இ. சரவணமுத்து, மு. நல்லையா, ச, கதிரவேலு, அ பஞ்சாட்சரம் உட்படப்பலர் மாற்றலாகிச் சென்ற ஆசிரியரின் சிறப்பியல்புகள் குறித்துப் பேசினார்கள். விழாத்தலைவர் திரு சு. குமாரசேகரம் ஆசியர்கள் சார்பில் திரு. ரி. ஐயாத்துரைக்கு ஞாபகப் பரிசிலை வழங்கினார்.

## காங்கேசன்துறையில் சீன அரிசிக் கப்பல்

மாவிட்டபுரம், ஞாயிறு

சீனாவிலிருந்து காங்கேசன் துறைக்கு அரிசிக் கப்பல் ஒன்று வந்துள்ளது.

சீனாவிலிருந்து 11,000 தொன் அரிசியுடன் வந்துள்ள கப்பலின் பெயர் 'பிறைட்டன்' என்பதாகும்.

1970ம்ஆண்டில் முதலாவதாகக் காங்கேசன்துறைக்கு வந்துள்ள இக்கப்பலிலிருந்து இறக்குமதி வேலைகளை யாழ். துறைமுகக் கூட்டுறவாளர் சமாஜம் மேற்கொண்டுள்ளது.

இவ்வேலைகள் இன்னும் 3வாரங்களில் முடிவடைந்துவிடுமென அறிவிக்கப்படுகிறது.

## தேர்த் திருவிழா

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை மாரியம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது.

10 தினங்களாக தொடர்ந்து நடைபெற்ற திருவிழாக்களை அடுத்து நேற்று புதிதாகச் செய்யப்பட்ட அலங்கார ரதத்தில் சுவாமி பவனிவர, பஜனைகளும், இசைக் கச்சேரிகளும் முழங்கின.

## "நாவலருக்குப் பின்வந்த சைவக்காவலர்"

சுழிபுரம், ஞாயிறு

'எங்கெங்கு கிறிஸ்தவப் பாடசாலைகள் இருந்தனவோ அங்கங்கெல்லாம் அவற்றின் அயலிலே சைவப் பாடசாலைகளைத் தாபித்து சைவத்தைக் காத்த இந்துபோட் இராசரத்தினத்தின் சேவையை மறக்கமுடியாது என பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயஅதிபர் திரு செ- ஸ்ரீனிவாசன் வித்தியாலய மாணவர் மன்றத்தில் நடைபெற்ற அமரர் இராசரத்தினம் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், படிப்புக்காகப் பதவிக்காக எத்தனையோசைவர்கள் கிறிஸ்தவரான வேளையிலேமேலும் மேலும்சைவத்துக்கு அழிவு வராதபடி நிறுத்தியபெருமை திரு இராசரத்தினத்துக்கே உண்டு, ஈழநாட்டிலே 282 பாடசாலைகளைச் சைவ வித்தியாவிருத்திச் சங்கக் காரியதரிசியாகயிருந்து தாபித்தார் உணவு இல்லாத அநாதைப் பிள்ளைகளுக்கு உணவும், உடையும், கல்வியும் உதவித் தாயாய் தந்தையாய் தெய்வமாய் நின்று காத்த இந்துபோட் இராசரத்தினம் நாவலருக்குப்பின் வந்த சைவக்காவலர் எனச் சொன்னார்.

## "நவீன முறையில் விவசாயம் வேண்டும்"

மட்டுவில், ஞாயிறு

பொருளாதாரம் மந்த நிலையில் உள்ள எந்த ஒரு நாடும் ஸ்திரமான ஒரு அரசியல் சமுதாய அமைப்பைக் கொண்டிருக்க முடியாது என்ற உண்மையை அன்று அந்நியரின் ஆட்சிக் காலத்தில் உத்தியோகமே புருஷ லட்சணம் என்று இறுமாப்புக் கொண்டிருந்த நம்மவர், இன்று பூரணமாக அறிந்துகொண்டனர். நம் நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்று முதுகெலும்பாக உள்ளது விவசாயம் ஒன்றுதான். இதை நவீன முறையில் வளர்க்க முன்வரவேண்டும்.''

இவ்வாறு இங்கு நடைபெற்ற விவசாயக் கழகக் கூட்டம் ஒன்றிற்குத்தலைமை தாங்கிப்பேசிய விவசாயக் கழகத்தலைவர் திரு. எஸ். நடராசா கூறினார்.

## இரு பஸ் சேவைகள் விஸ்தரிக்கப்படும்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறைப் பட்டினசபையின் அயராத முயற்சியினால் இரு பஸ் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு, மயிலிட்டி. கட்டுவன் ஊடாகச் செல்லும் பஸ் சேவையும், யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பளை வரையும் உள்ள பஸ்சேவையும் காங்கேசன்துறை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கத்திடம் மேற்படி பஸ் சேவையால் தாம் கஷ்டமுறுவதாக நோயாளிகளும், மாணவ மாணவிகளும் மற்றும் பிரயாணிகளும் புகார் செய்ததையடுத்து பட்டினசபை தலைவர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இச்சேவைகள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

## வெளிநாடு செல்வர்

மாவிட்டபுரம், ஞாயிறு

இந்த நாட்டின் வளர்ச்சிக்காகவும் உத்தியோக சேவை திறமைக்காகவும் போட் ஸ்தாபனத்தின்ஆதரவில் யாழ் மாவட்ட விவசாய அதிபர்பொ மாணிக்கவாசகர் இரணைமடு விசேஷ திட்ட முகாமையாளர் திரு எல் சிவமுத்துலிங்கம் ஆகியோர் வெளிநாடுகளில் விவசாய அபிவிருத்திகள் பற்றி ஆராய்வதற்காக அனுப்பப்படவுள்ளனர்.

இவர்கள் பாகிஸ்தான் மலேஷியா. தாய்லாந்து பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ள விவசாய அபிவிருத்திகள் பற்றி ஆராய்ந்துதிரும்புவர்,

பெண்டியான், மார்ச் 22

லாவோஸில் மிக முக்கிய கிராமமொன்றை வடவியட்னாம் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சள் குங்குமம்

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த

## ஹரிச்சந்திரா



## வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த

## பந்தயம்

பாடல்கள்: கண்ணதாசன்
இசை: கே வி மகாதேவன்



வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி:

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




## சிவஜிகணேசன் - பத்மினி



பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த

சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

## தில்லானா மோகனாம்பாள்

A P நாகராஜன்


ரங்கள் பெறத் தவறுபவர்கள்மீது சட்டப்பிரகாரம் வழக்குத் தொடரப்படும் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை,
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

20-3-70 2008

## அறிவித்தல்

வலிகாமம் வடக்குப் பல. நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தெல்லிப்பளைக் கிளையில் ஏறக்குறைய 3000 சாக்கும், ஏனைய கழிவுப் பொருள்களும் விற்பனைக்கிருக்கின்றன.

சமாசத்தின் சுன்னாகத்திலுள்ள அலுவலகத்தில் அதற்குரிய கேள்விப்பத்திரங்களை ரூபா 25/- செலுத்திப் பெற்று, 27-3-70, 12 மணிக்கு முன்னர் சமாசத்தில் சேரக்கூடியதாக விண்ணப்பிக்கவேண்டும்.

க. இராமச்சந்திரன்
நிர்வாகக் காரியதரிசி
வலி-வட. பல. நோ. கூ.
ச. சமாசம்,
சுன்னாகம்.

2007


இன்று மட்டும்

## வெஸ்லி சினிமா

மானிப்பாய
தினசரி; 6-30,10-00
பிறிபோயா,போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த

## நான்



## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30

## குங்குமம்



வல்வெட்டித்துறை

## றஞ்சனா தியேட்டர்

தினசரி; 6-30, 9-30
பிறிபோயா,போயா 2-30
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த

## மகராசி



## REGAL JAFFNA

Daily 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 shows

VAN RAIAN EXPRESS


பார்வையாளர்கள் 4X100 யார் அஞ்சல்) வளர்மதி விளையாட்டுக்கழகம், விண்மதிவிளையாட்டுக்கழகம், தனபாலசிங்கம் விளையாட்டுக்கழகம்.

உபசபாநாகர் திரு. மு. சிவசிதம்பரம் பரிசுகளை வழங்கினார்.

## மென்பந்து போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

அரியாலைமேற்குவிளையாட்டுக்கழகம் இம்முறை தமது 51-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிற்காக நடாத்தப்படும் போட்டிகளில் "மென்பந்து எறி பந்தாட்டப் போட்டியில்" இம்மாதம் 29-ம் திகதி பிற்பகல் கோஷடிகளான யாழ். கென்னடி விளையாட்டுக்கழகமும், யாழ். யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகமும் அரியாலை சனசமூகநிலையமைதானத்தில் மோத இருக்கின்றன.

## தபால்கந்தோர் இடமாறும்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் தபாற்கந்தோர் தற்போது இருந்துவரும் கட்டிடம் போதிய வசதிகள் இல்லாததால் வேறு இடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது.

......

## வீரமாமுனிவர் விழா

முசலி, ஞாயிறு

முருங்கன்பகுதியைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களும் மெதடிஸ்த மிஷனைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்களும் ஒன்றுகூடி அடுத்த மாதம் 5ம் திகதி வீரமாமுனிவர் விழாவை முருங்கன் கிறிஸ்துராசா கோவில் மைதானத்தில் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்.

## உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஊரெழு மேற்கு கண்ணகை அம்மன் ஆலயத்தில் பங்குனி உத்தரத்தையொட்டி இன்று பகல் விசேஷ அபிஷேகம் மகேஸ்வரபூசையும் இரவு கண்ணகை அம்மன் திருவுலாவும் நடைபெறும்.


## MANOHARA JAFFNA


Now showing
Daily 4-45 7 & 9-45 p.m
Poya, Prepoya 4 shows
David Richard
in
ONLY WHEN I LARF
(Color)


பொருளாளர் திரு. ... தர்மலிங்கம். மற்றும் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அலங்கார ரதத்தில் சுவாமி பவனிவர, பஜனைகளும், இசைக் கச்சேரிகளும் முழங்கின.

கூட்டம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிப்பேசிய விவசாயக் கழகத்தலைவர் திரு. எஸ். நடராசா கூறினார்.

ளும் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

## கவர்ச்சிப் பெண்ணுக நிச்சய வழி—
## கோயா பெர்பியூமும் கோலோனும்




உங்கள் பெண்மையின் மென்மை வனப்பை மேலும் வனப்பாக்க, நம்பத்தகுந்த நறுமண வாசனைத் திரவியங்கள் கோயா பெர்பியூமும் கோலோனும்.

உலகின் உன்னத வாசனைத் தயாரிப்பாளர்கள் தனித்தனிச் சிறப்புடன் சீர் செய்தளிக்கும் ஏழு மனங்கவர் நறுமணங்கள் கொண்ட கோயா பெர்பியூமும் கோலோனும், நாகரிக மாநகர் தோறும் வசீகர வனிதையரால்விரும்பித் தேர்ந்தெடுத்துப்பாவிக்கப்படுவன.

நாள் முழுதும் நீடித்த நறுமணந் தரும் பரிமளமான கோயா பெர்பியூமும் கோலோனும், நாள்தோறும் பாவியுங்கள்.

பிளாக் ரேஸ், கார்டினியா, என்டைஸ், நம்பர் 5,
லவ் அஃபயர், டைம்லஸ் , வைல்ட் சில்க்.

லண்டன், பரிஸ், நியூயார்க், மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கு இப்போது யு. எஸ். ஆயுதங்கள் கிடைக்காது

## நிலைமையை கவனமாக அவதானித்துவருமாம் அமெரிக்கா

### எகிப்துக்கு சோவியத் ஏவுகணை வழங்குவது பற்றி நிக்ஸன் கவலை

நியூயோர்க், மார்ச் 22

**இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை இப்போதைக்கு நிறுத்தி வைப்பதென அமெரிக்கா முடிவுசெய்திருப்பதாகத் தெரிகிறது. அதிபர் நிக்ஸன் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றின் மூலம் இந்தக் கருத்து வெளியாகியிருக்கிறது.**

எகிப்துக்குச் சோவியத் யூனியன் ஏவுகணைகளைக் கொடுத்துதவுவதற்கு முடிவு செய்திருப்பதைப் பற்றிக் குறிப்பிட்ட அதிபர் நிக்ஸன் இது மிகவும் அதிர்ச்சியளிக்கும் செய்தியாகும் என்றார். இதனால் மேற்காசியாவில் ராணுவச் சமபலம் மாறிவிடுமென்பதில்லை. நிலைமையை அமெரிக்கா மிகவும் கவனமாக அவதானித்துவரும். நிலைமை மாறும்போது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் நிக்ஸன்.

மேற்காசிய நிலைமைக்கு அமைதியான தீர்வொன்றைக் காண்பதற்கு நான்கு வல்லரசுகள் தான் முயன்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார் அவர்.

கம்போடிய நிலைமை பற்றி நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு அதிபர் பதிலளிக்கையில் அங்கு நிலைமை என்னவாகுமென்று முன்கூட்டியே கூறமுடியாமல் இருக்கிறது என்றார்.

லாவோஸில் அரசாங்கப் படைகளுடன் சேர்ந்து போரிடத் தாய்லாந்துப் படைகள் செல்வது குறித்து கேட்கப்பட்டபோது லாவோஸில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றிபெற்றால் தாய்லாந்துக்குப் பயமுறுத்தலாக இருக்குமென்று குறிப்பிட்டார். ......

## கம்போடிய புதிய அரசின் கோரிக்கை

இந்தோசீன சம்பந்தமான சர்வதேசக் கட்டுப்பாட்டு ஆணைக் குழுவை மீண்டும் உருவாக்கி கம்போடியாவுக்கு அனுப்பிவைக்கும்படி கம்போடியாவின் புதிய அரசாங்கம் பிரிட்டனையும், சோவியத் யூனியனையும் கேட்டிருக்கின்றது.

1952ல் உருவாக்கப்பட்ட இந்தோசீன சம்பந்தமான ஜெனிவா மகாநாட்டுக்கு, பிரிட்டனும், சோவியத் யூனியனும் கூட்டுத் தலைமை நாடுகளாக இருந்தன.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி

## அரசியல் சாஸனம் திருத்தப்பட வேண்டும்

### கருணாநிதி வலியுறுத்தல்

விதுடில்லி, மார்ச் 22

மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று தாம் கூறி வருவதற்கான விளக்கத்தை தமிழ்நாடு ... திய அரசு பலவீனப்பட வேண்டுமென்று கூறுவதாகக் கருதக் கூடாது.

மத்திய அரசு பலமாக இருந்தால்தான் உள்நாட் ...

காங்கிரஸ் சொத்து

## கக்கன் மனு

சென்னை, மார்ச், 22

காங்கிரஸ் சொத்து தகராறு வழக்கில் ஜெகஜீவன் ராமையும் விசாரிக்க வேண்டும் என்று சென்னை ஹைக்கோர்ட்டில் தமிழ்நாடு பழைய காங்கிரஸ் (சின்டிகேட்) தலைவர் திரு. கக்கன் மனுவொன்றை தாக்குதல் செய்துள்ளார்.

காங்கிரஸ்கட்சி இரண்டாகி விட்டதால் சென்னையில் உள்ள 'சத்திய மூர்த்தி பவன்' கட்டிடமும் இதர காங்கிரஸ் சொத்துக்களும் ...

## "சமயவாழ்க்கை என்பது மனக்கட்டுப்பாடு"

கோப்பாய், ஞாயிறு

'உலகமக்கள் மத்தியில் இன்று சமய ஒற்றுமை சமயப்பண்பாடு அருகிவருவது வருந்தத் தக்கது மக்கள் இன்று சமய முறையில் வாழவில்லை. சீலமற்றவாழ்க்கை வாழ்க்கையாகாது. உண்மையும் அன்பும் சேவையும் இணைந்த வாழ்க்கையே வேண்டும்'' என கோப்பாய் கிறிஸ்தவகல்லூரிவருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து பேசுகையில் சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு சி பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழா கல்லூரித்திறந்த வெளியரங்கில் அதிபர் திரு இ கே சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. திரு பாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில் மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதே பாடசாலைகளின் நோக்கமெனவும், மாணவர் மத்தியில் பகுத்தறிவு வளர வேண்டுமெனவும், மனத்தைதியநெறிகளில் செல்லவிடாது சிறுவயதில்இருந்தே கட்டுப்படுத்திபண்டுத்துதல் அவசியமெனவும், அப்பொழுதே சிறந்த நாகரீகம் உருவாகும்எனவும் கூறினார் மனக்கட்டுப்பாடே சமய வாழ்க்கையென அவர் சொன்னார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு பாலசிங்கம் பரிசில்களை வழங்கினார் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## செம்பியன்பற்றில் ஆச்சேஸ் பண்டிகை

யாழ்ப்பாணம், திங்கள்

மரியாயின்சேனைச்சிப்பாய்கள் தங்கள் இராக்கினியாகிய மரியாய்க்குத்தங்களை முழுவதும் அர்ப்பணித்தலைப்புதுப் பிக்கும்சடங்குத்களடங்கிய 'ஆச்சேஸ்' பண்கையைச் செம்பியன்பற்று தாளையடி ஆகிய இரு இடங்களிலுமுள்ள சேனையாளர் இம்மாதம் 19ந்திகதி செம்பியன்பற்று அர்ச் பிலிப்பு நேரியார் ஆலயத்தில் கொண்டாடினர்.

இளைஞரின் சேவை எமது நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசிய மென்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்தமையால் தான் பளையிலே தேசிய இளைஞர் சேவையை ராஜாங்க அமைச்சர் ஆரம்பித்து வைத்தாரென்றும் மரியாயின் சேனையும் தேசிய சேவை செய்யும் ஓர் இயக்கமென்றும், அதில் விசேஷமாக இளைஞர் சேர்ந்து தொண்டாற்றவேண்டுமென்றும் கட்டளைக் குருவராகிய ...

## மருந்து தெளிப்பதை தடுக்கிறார்களாம்

கோப்பாய், ஞாயிறு

இக் கிராமப்பகுதியில் மலேரியாத் தடுப்பு மருந்து தெளிக்கப்படுவதைப் பல வீட்டுச் சொந்தக்காரகள் தடைசெய்கிறார்களாம். அத்துடன் இம்மருந்து தெளிக்கப்படுவதால் மூட்டைப் பூச்சிகள் வீடுகளில் அதிகரித்துள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளனர்.

இப் புகாரையடுத்து கோப்பாய் மலேரியாத் தடைஇயக்க உத்தியோகத்தர்கள் வீடுகள் தோறும் சென்று மலேரியாத் தடுப்பு இயக்கம் குறித்து ஆலோசனை கூறிவருகிறார்கள்.

டி. டி. ரி. மருந்து தெளித்த பின்னர் மூட்டைப் பூச்சிகள் அதிகரிப்பது என்பது தவறான கருத்தெனவும், தெளிக்கப்படும் மருந்து மூட்டைப்பூச்சிகளை அழிக்கவோ, அதிகரிக்கவோ செய்யக்கூடிய தன்மையுடையன வல்ல எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## 'மகாவித்தியாலயம் ஆக்கித் தருக'

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பெரியபுலம் மெ. மி. த. கலவன் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர்சங்கம் பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. சி. முத்தையா தலைமையில்கூடியது, புதிய வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: செனட்டர் த. நீதிராசா, உபபோஷகர்: திரு. த. ச துரைராசா. தலைவர் திரு. சி. முத்தையா உபதலைவர்கள்: திரு. க. ஜெயரட்ணம் திரு. பெ. செல்வநாயகம், காரியதரிசி திரு. செ. குமாரவேலு, உபகாரியதரிசி: திரு. த. நடராசா, தனாதிகாரி: திரு. ச. நாகராசா, நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பெரியபுலம் மெ. மி. த. க. பாடசாலையை மகாவித்தியாலயமாக்கித்தருமாறு கல்விமந்திரி, நல்லூர்த் தொகுதி எம்.பி. வட பிரதேச கல்விஅதிபதி ஆகியோரைக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. ......

## அஞ்சலி

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இந்துபோட் இராசரத்தினத்தின் மறைவையொட்டி இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக 2 நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

0 0 0

ஊரதீவு, ஞாயிறு

சைவத்தையும், தமிழையும் ஒன்றிணைத்து அயராதுழைத்த, சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் தலைவர், வழக்கறிஞர்எஸ். இராசரத்தினத்தின் மறைவுக்காக ஊரதீவு இளந்தமிழர் மன்றக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

.........

## ஆலய நிர்வாகிகள்

ஊரதீவு, ஞாயிறு

புங்குடுதீவு கண்ணகி அம்பாள் எனஅழைக்கப்படும்ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்பாள் ஆலய பரிபான சபையின் ...

## 'பேச்சும் செயலும் ஒன்றுதலே உன்னத இலட்சியம்'

### வலி. கிழக்கு த. ஆ. சங்க பேச்சுப்போட்டி முடிவுகள்

உரும்பராய், திங்கள்

''மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர் சங்கங்கள் செய்துவரும்தொண்டு சிறந்தது. சுதந்திரமானமுறையில் வலி. கிழக்குத் தமிழாசிரியர் சங்கம் மாணவர்கள் கல்வி அறிவை விருத்திசெய்யக்கூடியவகையில் பேச்சுப்போட்டியை வழக்கம்போல வருடாவருடம் நடாத்திவருவது பாராட்டுதற்குரியது. எதிர்காலச் சந்ததியினர் நல்ல மேடைப் பேச்சாளராக, சிறந்த தலைவர்களாக வருவதற்குப் பேச்சுவன்மை அவசியம். பேச்சும் செயலும் ஒன்றுதலே உன்னத இலட்சியமாகும்'' என இம்மாதம் 21-ம் திகதி வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் ஆதரவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற 'பேச்சுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சான்றுப் பத்திரங்களை வழங்கி உரையாற்றிய கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. வே. சண்முகநாதன் குறிப்பிட்டார்.

சங்கக் காரியதரிசி திரு. அ, பஞ்சாட்சரத்தின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமான இவ்விழாவுக்கு வட இலங்கை தமிழாசிரியர் சங்கத்தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை தலைமைதாங்கினார்.

சங்கத்தலைவர் திரு. க. இ. குமாரசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். பேச்சுப் போட்டி உபசபைச் செயலாளர் திரு. பொ வேலும்மயிலும் நன்றிதெரிவித்துப் பேசினார்.

மேற்பிரிவு ஆண்கள் சு. பரமேஸ்வரன், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், வ. சிவஞானம், ஆவரங்கால் எம். எம், பாடசாலை, வெ மகாதேவன் ஆவரங்கால் எம்- எம். பாடசாலை.

மேற்பிரிவு பெண்கள், சி. நகுலாதேவி. உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை இ. மனோகராதேவி கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை, க. சாரதாம்பிகை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

மத்தியபிரிவு ஆண்கள் அ. ஜெயதேஸ்வரன், அச்சுவேலி ஸ்தானபாடசாலை, செ. தர்மராசா ஆவரங்கால் எம். எம். பாடசாலை, ... ரங்கால் எம். எம், பாடசாலை, வ. வசந்தாதேவி கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை, இ. பாமா உடும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை.

## த. அ. வாலிப முன்னணி உறுப்பினர்கள்

வேலணை, ஞாயிறு

நாரந்தனை ஈச்சங்காடு தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி உத்தியோகஸ்தர்கள் விபரம் வருமாறு

தலைவர் திரு ம. செபஸ்தி உபதலைவர் திரு சிமியோன் டேவிட், செயலாளர் திரு அ. ஞானேந்திரன், உபசெயலாளர் திரு. செ பமாலை இராசு பொருளாளர் திரு. அ. இராசேந்திரன். மற்றும் 6 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ......

## புதிய நிர்வாகிகள்

உரும்பராய் ஞாயிறு

இணுவில் இந்துவிளையாட்டுக் கழகத்தின் 5-வது வருடாந்தக் கூட்டம் இணுவில் மத்தியசந்தை மைதானத்தில் திரு செ. இரகுநாதன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்திரு செ. இலகுநாதன் உபதலைவர் திரு வா சிவனேசன், காரியதரிசி திரு பெ. கனகசபாபதி, உபகாரியதரிசி; திரு வே. சண்முகநாதன், தனாதிகாரி திரு செ பாலசுந்தரம்,

நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் நா. பதஞ்சலி, ம மகாலிங்கம் பொ அழகரத்தினம்: த இராசேந்திரம், க. பாலசுந்தரம், ......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 23-3-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணாநிதி வலியுறுத்தல்

விதுடில்லி, மார்ச் 22

மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று தாம் கூறி வருவதற்கான விளக்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி புதுடில்லியில் நடைபெறும் மாநிலமுதலமைச்சர்கள் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பலவும் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டும், மத்தியிற் கூட்டு அமைப்பு ஒன்று ஏற்படவேண்டும் என்றுநாங்கள் கூறிவருவதின் மூலம் மத்திய அரசு பலவீனப்படவேண்டுமென்று கூறுவதாகக் கருதக் கூடாது.

மத்திய அரசு பலமாக இருந்தால்தான் உள்நாட்டில் ஸ்திரமான நிலைமை ஏற்பட முடியும், அதுபோலவே மாநிலங்களும் தங்கள் உரிமைகளைச் சரியாகக்கேட்டுப் பெறமுடியும் என்று திரு. கருணாநிதி கூறினார்.

மத்தியில் கூட்டாட்சியும், மாநிலங்களில் சுயாட்சியும் ஏற்படுவதற்கு அரசியல் திட்டம் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# பாகிஸ்தானுக்கு யு. எஸ். தாங்கிகள்

## செஸ்டர் பவல்ஸ் கண்டனம்

புதுடில்லி. மார்ச். 22

துருக்கிமூலம் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 100டாங்கிகளை கொடுப்பது சம்பந்தமான திட்டம் ஒன்று அதிபர் நிக்ஸனின் ஒப்புதலுக்காகக்காத்திருப்பதாகத் தெரிகின்றது.

அமெரிக்கா துருக்கிக்கு ஏற்கனவே வழங்கியுள்ள டாங்கிகளில் 100 பாகிஸ்தானுக்கு கொடுப்பதற்கும் இதற்குபதிலாக துருக்கிக்கு அமெரிக்கா புதுரக டாங்கிகளைவழங்குவதற்கும் இத்திட்டம் வகை செய்கின்றதாம்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா டாங்கிகளை துருக்கிமூலமாக வழங்குவதற்கான திட்டத்தை முன்னர் இந்தியாவில் அமெரிக்க தூதராகவிருந்த திரு. செஸ்டர் பவல்ஸ் வெகுவாகக் கண்டித்திருக்கிறார். இந்தத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் முன்னைய ஆட்சியாளர் செய்த பிழைகளையே இப்போதைய ஆட்சியாளரும் செய்வதாகமுடியும் என்று அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

# சீனத்தலைநகரில் பாலஸ்தீன் அரபுக்குழு

ஹாங்கொங், மார்ச் 22

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தூதுகோஷ்டியொன்று பீகிங்சென்றடைந்துள்ளது. இத்தூது கோஷ்டிக்கு அரபுக் கொரில்லா இயக்கங்களின் தலைவர் அரபாட் தலைமை வகிக்கின்ருர். பீகிங் சென்றடைந்த இந்தக் கோஷ்டியினரை சீன உயர்தர தூதுகோஷ்டியொன்று வரவேற்றது. பாலஸ்தீனவிடுதலை இயக்கத்துக்கு சீனக்கம்யூனிஸ்ட் அரசின் ஆதரவைப் பெறுவதோடு, ஆயுதப்பொருளாதார உதவிகளை இந்தத் தூதுக்குழுகோரும் என்று தெரிகின்றது. ஏற்கனவே திரு. அரபாட் தலைமையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தூது கோஷ்டியொன்று மாஸ்கோ சென்று திரும்பியது குறிப்பிடத்தக்கது.

### லெபனுனில் பரபரப்பு

லெபனுனில் அரபுக் கெமாண்டோ இயக்கத்தினருக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் அண்மையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் ஆயிரக்கானவர்கள் பேருட்டில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்திஞர்கள் தப்பபிப்பிராயம் காரணமாகவே மேற்படி மோதல் ஏற்பட்டதாக அரசாங்க தரப்பில்கூறப்பட்டது. ஆனல் வேண்டுமென்றே நடந்த சம்பவம் இதுவென்று கொமாண்டோக்கள் அறிவித்தனர்.

மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

காங்கிரஸ்கட்சி இரண்டாகி விட்டதால் சென்னையில் உள்ள 'சத்திய மூர்த்தி பவன்' கட்டிடமும் இதர காங்கிரஸ் சொத்துக்களும் யாருக்கு என்பதில் தகராறு ஏற்பட்டுள்ளது தெரிந்ததே

இந்தச் சொத்துக்கள் இப்போது சிண்டிகேட் காங்கிரஸ் நிர்வாகத்தில் இருப்பதை எதிர்த்து இந்திரா காங்கிரசை சேர்ந்த சி. சுப்பிரமணியமும், பக்தவக்சலமும் வழக்கு தொடர்ந்து உள்ளனர்,

## அரபுக்கள் இருவர் மீது விசாரணை

ஏதென்ஸ், மார்ச் 22

18 மாதங்களுக்குமுன்னர் ஏதென்ஸில் ஒரு விமானப் மீது தாக்குதல் நடத்திய குற்றத்துக்காக இரு அரபுக்கள் மீது விசாரணை நடைபெறுகின்றது. இஸ்ரேலுக்கு ஆயுதங்களை இந்த விமானங்கள் ஏற்றிச்செல்வதின் காரணமாக இந்தத் தாக்குதலை நடத்தியதாக அவர்கள் கூறியிருக்கின்றனர்.

## இன ஒதுக்கலுக்கு பிஷப்கள் எதிர்ப்பு

ஸாலிஸ்பரி, மார்ச், 22

ரொடீஷியாவில் ஐயான் ஸ்மித் ஆட்சியினர் தேவாலயங்களிலும் இன ஒதுக்கல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கமுனைவதை அங்குள்ள ரோமன் கத்தோலிக்க பீடத்தின் 5 பிஷப் ஆண்டவர்கள் கண்டித்திருக்கிருர்கள்.

## தற்கொலை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

வேலணை கிழக்கு வாசியான பாலசிங்கம் மகள் தவமணி (வயது 18) நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்

தகப்பன் இறந்த துயரத்தால் மனமுடைந்து இருந்தார் என விசாரணையின் போது தெரியவந்தது.

ஊர்காவற்றுறை பொலிசார் சார்பில் திரு. சொர்ணலிங்கம்விசாரணையை நடத்திஞர்.

0 0 0

கரம்பன் தெற்கு வாசியான அந்தோனிப்பிள்ளை-அன்ரன் என்னும் 17 வயது வாலிபர் தற்கொலைசெய்துகொண்டார்.

வீட்டுக் கஷ்டம், வேலையின்மை, காரணமாக இவ்வாலிபர் மனமுடைந்திருந்ததாகமரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மாயாயின் சேவையும் தேசிய சேவை செய்யும் ஓர் இயக்கமென்றும், அதில் விசேஷமாக இளைஞர் சேர்ந்து தொண்டாற்றவேண்டுமென்றும் கட்டளைக் குரவராகிய ...ன. லெபோன் சுவாமிகள் திவ்விய பூசை, திவ்விய சற்பிரசாதஆசிர்வாதம் இவைகளை நிறைவேற்றியபின் கூறிஞர்.

கோவில் ஆராதனைகளைத் தொடர்ந்து செம்பியன் பற்று ரோ. க பாடசாலை மண்டபத்தில் கட்டளைக் குரவர் தலைமையில் கதம்ப நிகழ்சிகள் நடைபெற்றன. செம்பியன் பற்று ரோ. க பாடசாலைச் சிறுமிகளின் நடனங்களும் சேனையாளரின் பாட்டுக்கள் நடனங்கள் முதலியனவும் இடம்பெற்றன. திருமதி ஏ எம் டி எட்மண்ட் ஆகியோரும் பேசினர்.

தெனவும், தெளிக்கப்படும் மருந்து முட்டைப்பூச்சிகளை அழிக்கவோ, அதிகரிக்கவோ செய்யக்கூடிய தன்மையுடையன வல்ல எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## வால் நட்சத்திரம்

யாழ்ப்பாணம், திங்கள்

கிழக்கு வானத்திலே வால்வெள்ளி ஒன்றை கடந்த சில நாட்களாகக் காணக்கூடியதாக விருக்கிறது. விடிவதற்கு முன் சுமார் நான்கு மணிக்கு இந்த வால் நட்சத்திரம் நேர்கிழக்கு வானத்தில் தோன்றி மேல் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இதன் வால் வலது பக்கமாகக் கொஞ்சம் சரிவாக மேல் நோக்கியிருக்கின்றது.

## நிர்வாகிகள்

ஊரதீவு, ஞாயிறு

புங்குடுதீவு கண்ணகி அம்பாள் என அழைக்கப்படும்ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்பாள் ஆலய பரிபான சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு சமீபத்தில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிளாத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி சின்னத்துரை உபதலைவர்: திரு சி முத்துக்குமாரு, காரியதரிசிகள்: திருவாளர்கள் க தாமோதரம்பிள்ளை, ந செல்லத்துரை. தனதிகாரி சோ க ஐயம்பிள்ளை.

பஞ்சாய அங்கத்தவர்களான திரு. நா. சிசெல்லையா வழக்கறிஞர் திரு பி கதிரவேலு ஆகிய இருவரினதும் ராஜினுமாக் கடிதம் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றதைத் தொடர்ந்து

# தமிழ்நாடு - மைசூர் முதல்வர்கள் அடுத்தமாதம் கூடிப் பேசுவர்

## காவேரி நீர்த்தகராறு தீருமா?

புதுடில்லி, மார்ச். 22

காவேரி ஆற்றில் மைசூர் அரசு அணைகள் கட்டுவது சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்னைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணாநிதிக்கும் மைசூர் முதலமைச்சர் திரு வீரேந்திரபாட்டீலுக்குமிடையில் அடுத்தமாதம் 17-ம் திகதி பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

மத்திய நீர்ப்பாசன அமைச்சர் திரு கே. எல். ராவ் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடுகள் செய்திருக்கின்ருர்.

காவேரி ஆறு மைசூர் மாநிலத்தில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் பாய்கின்றது. இந்த ஆற்றை மறித்து இரு அணைகளைக் கட்டிக் கொள்ள மைசூர் அரசு முடிவு செய்து இதற்கான வேலைகளையும் ஆரம்பித்து விட்டது. இந்த அணைகளின் காரணமாக தமிழ் நாட்டில் குறிப்பாகத் தஞ்சைப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதால் தமிழ்நாடு அரசு கடுமையான ஆட்சேபம் தெரிவித்தது. ஆனல் இந்த ஆட்சேபத்தைப் பொருட்படுத்துவதில்லையென்று மைசூர் அரசுமுடிவு செய்தது. இதன்பின் மத்திய அரசும் இந்த அணைகளைக் கட்டவேண்டாம் என்று ஆட்சேபம் தெரிவித்தது, அதையும் மைசூர் அரசு அலட்சியம் செய்தது. உத்தரவை மீறி அணைகளைக் கட்டிஞல் மத்திய அரசின் நிதி உதவிகள் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதையும் மைசூர் புறக்கணித்தது. இந்த நிலைமையில் இப்பொழுது இரு மாநில முதலமைச்சர்களும் சந்தித்துப் பேச விருப்பதை பலரும் வரவேற்றிருக்கிருர்கள்.

# திருச்செல்வம் பேச்சுபற்றி தமிழரசுவாலிபர் ஆத்திரம்?

கொழும்பு, ஞாயிறு

மகாவலி கங்கை திசை திருப்பும் திட்டம் சம்பந்தமான மசோதா குறித்து செனட்சபையில் செனட்டர் திருச்செல்வம் நிகழ்த்திய உரை குறித்து மட்டக்களப்பில் நடைபெறும் தமிழரசு வாலிபர் மாநாட்டில் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றதாக இங்கு கிடைத்த தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

செனட்டர் திருச்செல்வத்தைக் கண்டிக்கும் முயற்சி வெற்றிபெறவில்லையென்றும் அறியப்படுகின்றது.

ஐக்கியதேசியக் கட்சிக்கே அன்றில் கூட்டாட்சி கட்சிகளுக்கோ சாதகமாக தமிழரசு தலைமைப்பீடம் ஆதரவான கருத்துக்களை வெளியிடுவதில் கவனமாய் இருக்கவேண்டும் என்றும் இந்தக கட்சிகள் தேர்தலுக்குமுன் பல சலுகைகளை அளிப்பதாக உறுதியளித்துவிட்டு தேர்தலின்பின் அவைகளை மீறி வருகின்றனவென்றும் கூறும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகின்றது.

மக்கள் பிரதிநிதிகள்சபையில் திரு தர்மலிங்கம் நிகழ்த்திய உரையும் செனட் சபையில் திருச்செல்வம் நிகழ்த்திய உரையும் முரண்பாடாகவிருந்ததாகச் சுட்டிக் காட்டப்பட்டதாகத் தெரிகின்றது. (சி.பி.ஏ)

வித்தியாசாலை.

மத்தியபிரிவு ஆண்கள் அ. ஜெயதேஸ்வரன், அச்சுவேலி ஸ்தானபாடசாலை, செ. தர்மராசா ஆவரங்கால் எம். எம். பாடசாலை, இ. சிவலிங்கம் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை.

மத்தியபிரிவு பெண்கள் சு. சாந்தினி உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை த. சந்திரமலர் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, சு. புஷ்பலீலா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை.

கீழ்ப்பிரிவு ஆண்கள்: வே. இரத்தினசிங்கம் ஆவரங்கால் எம் எம். பாடசாலை, து. ஞானசிங்கம் வசாவிளான் ரோ. க, பாடசாலை. க. கனகசபேசன், உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை.

கீழ்ப்பிரிவு பெண்: கி. நந்தினி வசாவிளான் ரோ. க. பாடசாலை. ச. கருணு ஆவ...

கொழும்பு பிரபலவர்த்தகர் திரு. நா ம. மயில்வானம், திரு சி கு செல்லையா ஆகிய இருவரும் பஞ்சாய அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலி பரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம்7-03கிராம சஞ்சிகை, 7-15 பாட்டு. 7-45 செய்திச்சுருள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.


## அபிஷேகத் திரவியங்கள்

சந்தனக் குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப் பெற்றவை)

★ பழனி வாசனை விபூதி

★ அபிஷேக குங்குமம்

★ பஞ்சாமிர்த சாமான்களும்

★ நைவேத்திய சமான்கள்

வாசனை மிகுந்த — தெய்வீக மணம் கமழும்

* "ராதா" பத்மினி ஜவ்வாது
* 99 & 999 ஜவ்வாது
* சக்தி பூஜா அகர் பத்திகள்

விளைவு கூடம், சாம்பிராணி

மற்றும்

கோவில் தேவைகளுக்கான சகலவிதமான சாமான்களும்

எம்மிடம் நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கண்டுபிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப்போய் விடுகிறான். அதுபோல மாயையின் சுபாவம் இன்னதென்று நீ ஆய்ந்து கண்டுபிடித்துவிட்டால் அது உன்னிடமிருந்து ஓடிப்போய்விடும்.

— ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

ஈழநாடு
Eelanadu (N. tional Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம்
10-ந் திகதி (23-3-70)

## சமஅந்தஸ்து

தமிழுக்கு சமஅந்தஸ்து கிடைக்கவே தமிழரசுக்கட்சி வலியுறுத்தி வரவேண்டும். அதற்குக் குறைவாக எதையும் ஏற்கக்கூடாது என்று கூறும் தீர்மானமொன்று மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசு வாலிபமுன்னணி மகாநாட்டில் நிறைவேறியிருக்கிறது. இது புதிய தீர்மானமுமல்ல; புதிய விஷயமுமல்ல.

சிங்களமும் தமிழும் இந்நாட்டின் தேசிய மொழிகளாகவும் உத்தியோக மொழிகளாகவும் சட்டப்படி சமஅந்தஸ்துடன் விளங்கி வந்தவை. இரு மொழிகளையும் உத்தியோகமொழிகளாக்கும் மசோதா 1944-ம் ஆண்டில் சட்டசபையில் கொண்டுவரப்பட்டபோது சிங்களத்தை மாத்திரம் உத்தியோக மொழியாக்க ஒருசிலர் திருத்தப்பிரேரணை கொண்டுவர எடுத்த முயற்சியை காலஞ்சென்றபிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா முறியடித்தார். தேசபிதா என்று அனைவரும் அவரைப் போற்றிப் புகழ்வதற்கு அவரது இத்தகைய செயல்களே காரணமாக இருந்தன. அவரது நினைவுதினம் நேற்று நாட்டின் பலபகுதிகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. நினைவு தினத்தை ஊர்வலங்கள், கூட்டங்கள், மேளதாளங்கள் ஆகியவற்றுடன் கொண்டாடிவிட்டால் போதாது. திரு. டி. எஸ். சேனநாயகாவை இந்த நாட்டு மக்கள் அனைவரும் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டுமானால் அவர் உருவாக்கி பேணிவந்த உண்மையான தேசியஐக்கியத்தை நிலைநாட்டவேண்டும். இது கடினமல்ல.

முன்னர் இருந்த நிலைமையை மாற்றி 1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது தான் தேசியஐக்கியம் குலையவும் நாடு பின்தங்கவும் காரணமாக இருந்தது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

தமிழுக்குச் சமஅந்தஸ்து என்பது இந்த நாட்டில் இருந்திராத விஷயமல்ல. முன்னர் நடைமுறையில் இருந்ததுதான் அங்கீகாரம் பெற்ற சட்டம். தமிழ் அரசுக்கட்சியோ, தமிழ்க்காங்கிரசோ கோருகிறதென்பதற்காக நாட்டிக்குத் தீங்கைக் கொண்டுவந்த புதிய சட்டத்தை விடாப்பிடியாக வைத்திருக்கவேண்டுமென்பதில்லை.

தேசபிதாவின் நினைவாகவும் நாட்டின் ஐக்கியத்தையும் முன்னேற்றத்தையும் கருதியும் சிங்களம் மட்டும் சட்டத்தை நீக்கி முன்னர்போல் சிங்களமும் தமிழும் சமஅந்தஸ்துடன் விளங்கப்படவேண்டிய சமயம்வந்து விட்டது.

## ஆபாசம்

ஆபாசத்திரைப் படங்கள் அதிகரித்து வருவதாகவும் இந்தத் தொல்லையைச் சமாளிப்பதற்குப் பொலிசாருக்கு இப்போதைய சட்டம் அதிக வாய்ப்பளிக்கவில்லையென்பதுடன் பொலிசாருக்கு வேறுபல கடமைகளிருப்பதாகவும் பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிறார்.

தணிக்கைச் சபையின் அனுமதிபெற்றுத் திரை வெளிநாடுகளுக்கும் அனுப்புகிறார்களாம். நமது நாட்டுக்குக்கேடு செய்வதுடன் இதில்பண மோசடியும் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று கருத இடமுண்டு.

சாதாரண சினிமாப் படங்களில் வரும் ஆபாசக்காட்சிகளையும் அந்தப் படங்களில் தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளையும் சுவரொட்டி விளம்பரங்களில் காட்டு

# "ஈழநாடு" பாலைதீவு நிவாரண நிதி



"பாலைதீவு விபத்து நிவாரண நிதிக்கு" லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் பதிப்பாளரும், கொழும்பு மாட்ட சமாதான நீதவானுமாகிய திரு. ச. த. சின்னத்துரை அவர்கள் பெருமுயற்சி எடுத்து ரூபா 1567 திரட்டி அனுப்பியுள்ளார். இவரின் முன்மாதிரியைப் பின்பற்றி அன்பர்கள் மனமுவந்தளிக்கும் நன்கொடைகள் உற்றார் உறவினரைப்பலி கொடுத்துப் பரிதவிக்கும் பல குடும்பங்களுக்கு உறுதுணையளிக்கும் என்பதை யாவரும் அறிவர். திரு ச த சின்னத்துரை மூலம் நிதிஉதவியளித்தோரின் விபரத்தை கீழே பிரசுரிக்கின்றோம்.

| | |
|---|---|
| லீலாபஞ்சாங்க சித்திரககலண்டர் உரிமையாளர் திரு ச த சின்னத்துரை ஜேபி லீலா ஸ்டோர்ஸ், கொழும்பு. | ரூ 151-00 |
| ஆர் எஸ் பெஸ்ரன்ஜி அசோசியேற் றட் பேப்பர்டிரேட்ஸ், 227, மெயின் வீதிகொழும்பு | ரூ 100-00 |
| எஸ் தில்லைநாதன், 122, பார்னிஸ்பிளேஸ், கொழும்பு | ரூ 100-00 |
| ஏச் ஏ நகின்டாஸ் அன்கோ, 137, மெயின் வீதி, கொழும்பு-11. | ரூ 100-00 |
| இராசேஸ்வரி பிராமண ஹோட்டல், கோட்டைபுகையிரத நிலையஎதிராக கொழும்பு-11 | ரூ 100-00 |
| மலேயன் டிரேடிங் கம்பனி, 14 குவாறிரோட், கொழும்பு. | ரூ 50-00 |
| என் பி அப்புல் கபூர், 102/2, ஆட்டுப்பட்டி தெரு, கொழும்பு. | ரூ 50-00 |
| ரும்சன் காட்வெயர் என்ரபிறைஸ் லிமிட்ரட் 443, பழைய சோனகதெரு | ரூ 50-00 |
| எம் கனகசபை 22 அலக்சான்ரு ரோட் கொழும்பு | ரூ 50-00 |
| பி கே பரமநாதன் அன்கோ, 109, பழைய சோனக தெரு, கொழும்பு | ரூ 51-00 |
| கே எல் அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ், மெயின்வீதிபண்டத்தரிப்பு. | ரூ 51-00 |
| ஆர் செல்லையா, செல்வம் ஸ்டோர்ஸ், 135, மலிபான்வீதி கொழும்பு | ரூ 50-00 |
| ஆர் குணராசா 17, சென்யோன்ஸ்வீதி, கொழும்பு 11 | ரூ 51-00 |
| மு முத்தையாபிள்ளை 105, 5ம்குறுக்குத்தெரு கொழும்பு | ரூ 50-00 |
| இம்பீறியல் குரோசறி ஸ்டோர்ஸ், 1211 மருதானை ரோட், கொழும்பு | ரூ 26-00 |
| கிருபானந்த ஸ்டோர்ஸ், 214, வாட்பிளேஸ், கொழும்பு- | ரூ 25-00 |
| ஐ என் எஸ், கொழும்பு-11 | ரூ 25-00 |
| ஏ தனசேனன், வழக்கறிஞர், 282/7 டாம் வீதி, கொழும்பு 12, | ரூ 25-00 |
| ரி கே மகாலிங்கம், 85, 5ம் குறுக்குத் தெரு கொழும்பு-11 | ரூ 25-00 |
| எஸ் பி சாகுல் ஹமீது, 244, பாங்சல் வீதி, கொழும்பு-11 | ரூ 25-00 |
| பிரீ லங்கா ஸ்டோர்ஸ், 268, மெயின்வீதி, கொழும்பு-11 | ரூ 25-00 |
| ஜே எம் ஜே வி பெர்ணண்டோ அன் கோ 34, ஓல்டபுச்சர்ஸ் வீதி, கொழும்பு-1[illegible] | ரூ 25-00 |
| பியூடடர்ஸ் கோப்பரேசன், 4[illegible] பாங்சால் வீதி, கொழும்பு-11 | ரூ 25-00 |
| எம் எஸ் லிங்கம், 1209, மருதானைவீதி, பொரளை | ரூ [illegible] |
| வ விசுவலிங்கம், 7, ரைபிள்வீதி, கொழும்பு-[illegible] | ரூ [illegible] |
| கே இராஜேந்திரம், 129 5ம்குறுக்கு தெரு | ரூ 10-00 |
| எம் எஸ்லிங்கம் 57 பஞ்சிகாவத்தை ரோட் கொழும்பு | 2-00 |
| கு தனிநாயகம் வேலணை | 1-00 |
| கே வீ இராசையா 1209, பிளாந் கொழும்பு | 1-00 |
| கே சின்னப்பா 159, மலே வீதி கொழும்பு | 1-00 |
| எஸ் கனகசபாபதி 131, 5ம் குறுககுத் தெரு, கொழும்பு-11 | ரூ 5-00 |
| சுசிலா ஸ்டோர்ஸ், 1623 மருதானை ரோட், கொழும்பு | ரூ 10-00 |
| சரசுவதி ஸ்டோர்ஸ், 12 ஆதமலி பில்டிங், கொம்பு-11. | ரூ 10-00 |
| சி தேசபந்து, நியூ லீலா அச்சகம், கொழும்பு-12 | ரூ 3-00 |
| சி. கைலநாதன், சஞ்[illegible] ஆராச்சி தோட்டம், கொழும்பு-12 | ரூ 5-00 |
| செ, சங்கரலிங்கம், 33, சென் செபஸ்தியான் மேடு, கொழும்பு-12 | 2 00 |
| [illegible] அப்துல் ஹுசேன் அன் சன்ஸ், 20/22 [illegible] குறுக்குத்தெரு, கொழும்பு | ரூ 5-00 |
| சி. அருளானந்தம், லீலா ஸ்டோர்ஸ், 249, நல கொட பிவக்கை, கொழு[illegible] | ரூ 5-00 |

# சைவமும் தமிழும் பேணும் பெரியார்

முன்னைவருகிய இறைநினைவும், சமுதாயத்தில் நற்பணி செய்கின்ற பண்பும் எந்தநேரத்திலும் எந்த இடத்திலும் எல்லோருக்கும் நல்லன செய்கின்ற உள்ளமும் உடையவர் இன்றைய நாளில் மிக ஒறுப்பாகவே உள்ளனர். ஆனால் அந்த நல்ல இலட்சியங்களுக்காக வாழ்கின்றவரும்சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் அறநெறிக்காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள். அவரது 81 வயதுஇன்றுஆரம்பமாகின்றது.

துல்லியமான வெள்ளை வேட்டி, காதிக்குல்லா அரையில் விரிந்துகட்டிய அங்கவஸ்திரம், பால் போன்ற ஆபாரம் இவற்றுடன் எந்தக்கூட்டத்திலும் தனித்துவிளங்குகின்ற உருவத்தை எல்லோருமே இனங்கண்டுகொள்ளுவர். குழந்தை உள்ளம் மனதிலே உள்ளதை வெளிப்படையாகச் சொல்லுகின்ற பண்பாடு இவற்றினுல் இன்றைக்கு சமயப்பணிகளை மேற்கொண்ட அத்தனை இளைஞர்களையும் முதியவர்களையும் கட்டியாளபவர் முதலியார் செ. முத்துத்தம்பி.

இந்தநாட்டில் வாழ்ந்த பெரியார்களாகிய ஞானப்பிரகாச முனிவர், நாவலர் பெருமான், சேர் பொன் இராமநாதன் ஆகிய முப்பெருந்தலைவர்களே நமது இன்றைய சமுதாயத்துக்கும் எதிர்கால இளைஞர்களுக்கும் ஒளித்தம்பங்களாக உள்ளனர் என்ற கருத்தை எப்போம் வலியுறுத்திவரும் இவர், வள்ளுவர், பாரதியார் ஆகிய புலவர்களில் ஈடுபாடும், கீதையின் தத்துவங்களில் நம்பிக்கையும் உடையவர். எந்தமேடையிலும் எப்போதும் குறிப்பிட்டஎல்லாவிடயத்தையும் இந்தவயதிலும் தெளிவோடு பேசுகின்ற ஆற்றல் மிக்கவர். அவர் குரலில் கனிவும் கம்பீரமும் ஒலிக்கும்.

எண்பதுவயதைத் தாண்டி எண்பத்தொராவது வயதில் காலடி எடுத்துவைக்கும் இப்பெரியாரின் தொண்டுமென்மேலும் கிடைக்க இறைவன் அருள்பாலிப்பாராக.

அன்பும் பண்பும் அறவழியில்
அமைய அடக்க உணர்வுடனே
இன்பத் தமிழில் உரையாற்றி
எமது சமூகம் இலங்கிடவே
தன்பே ருக்கத் துடன் உழைக்கும்
சான்றோர் முத்துத் தம்பியரும்
தென்பும் அருளும் சேர்ந்திடவே
சேவை செய்க! நமக்கென்றும்

இ. நா.

# ஜெயராஜ் எழுதுவது..

யாழ்ப்பாணத்தின் 'கிராண்ட் ஓல்ட் மான்'' முதுபெரும் கிழார்) என்று கூறப்படும் முதலியார் முத்துத்தம்பியவர்களுக்கு இன்று எண்பது நிறைந்து எண்பத்தோராவது வயது பிறக்கின்றது. வயதில் முதியவராயினும் அவர் உள்ளம் இளமையாகவே உள்ளது.

''எண்பது வருட அனுபவத்தில் தாங்கள் கண்டதென்ன? என்று கேட்டதற்கு, ''நாமெல்லாம் ஒரே தெய்வத்தின் கருவிகள். அவர் காட்டும் வழியிலே காரியங்களை விருப்புவெறுப்பின்றிச் செய்வதே நமது கடமை. காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே, எல்லாச் சமயங்களையும் போற்றி, தெய்வத்தின் பெயரால், அன்புடன் ஒற்றுமையாக வாழவேண்டும்'' என்றார்கள்.

முன்போல தமிழ்மொழிக்கு சமஅந்தஸ்து கிடைக்கும் வரையில் தமிழர் அயராது ஒற்றுமையாகப் போராடவேண்டுமென்பதே தமது சொந்தக் கருத்தென்கிறார் முதலியார். அவ்வித மொழி உரிமை மீண்டும் கிடைத்தால்தான் இங்கு தமிழர் மானத்துடன் வாழமுடியுமென்றார். மட்டக்களப்பில் கூடிய தமிழ் வாலிபர்களும் இவ்விதமே தீர்மானித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தை ஆரம்பித்தது, கருணலய பாண்டியனாரின் தமிழ்ப்பணி இலங்கைக்குக் கிடைக்கும்படி செய்தது முதலியவற்றில் முதலியார் முக்கிய பங்கு கொண்டவர். யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவராக இருந்து நகரின் முன்னேற்றத்துககான பல பணிகளைச் செய்தவர். இங்கு பலமுக்கிய ஸ்தாபனங்களிலே உபதலைவராக இருப்பதுடன் டாக்டர்களின் யோசனைகளையும் மீறி இத்தள்ளாதவயதிலும் பொதுவைபவங்களில் உற்சாகமாகக் கலந்து கொண்டு, பேசுகின்றார். அவர் இல்லாத கூட்டம் நிறைவுபெற்றதாகாது என்று கூறுமளவுக்கு ஈழத்தமிழரின் தலைநகராமென்று கூறக்கூடிய யாழ்ப்பாணத்தின் பொதுவாழ்விலே பங்கெடுத்து வருகின்றார்.

இவ்வளவு அனுபவமும் திறமையும் மிக்க ஒரு பெரியார் இலங்கை செனேட்

மல். கோவில் வழிபாட்டுடன் அமைதியாக இன்றைய நாளைக் கழிப்பதாகத் தெரிகிறது. அப்பெரியார் நீடுழி வாழ்க!

0 0 0

கொழும்பிலே ஒரு கூட்டத்துக்குச்சென்றிருந்தேன். கூட்டம் தேவாரத்துடன் ஆரம்பமாயிற்று. ஒரன்பர் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்ற திருத்தாண்டகத்தை இழுத்து இழுத்துப் பாடினார் 'பிணியறியோம்' என்பதற்குப் பதில் 'பிணியறிவோம்' என்று அவர் பாடியது, பலரையும் திடுக்கிடச் செய்தது.

சைவசமயக் கூட்டங்களிலும், கோவில்களிலும் தேவாரம், புராணம் முதலியவற்றை, ஏதோ வெறும் சம்பிரதாயமாகக்கொண்டு யாரும் மனதில் தோன்றிய எந்தத் தேவாரத்தையும் தப்பும் தவறுமாக, அசந்தர்ப்பமாகவும்கூடபாடுவது பெரும் பாவமாகும் எந்தச் சமயத்தில் யார், எந்தத் தேவாரத்தை புராணத்தை பாடவேண்டுமென்பதை முன்கூட்டியே ஒழுங்கு செய்து பாடச்செய்வதாயின், இவ்வித தவறுகள் நேராது. அப்பொழுதுதான் எல்லாருடைய உள்ளத்தையும் தெய்வத்திடம் ஒன்றவைத்து, எடுத்த காரியம் தெய்வ அருளால் வெற்றிபெறவும் முடிவதாக இருக்கும்.

0 0 0

நந்திநாம நமச்சிவாய... வெனும், சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன் சொல், சிந்தையான் மகிழ்ந்தேத்த வல்லாரெலாம், பந்தபாச மறுக்க வல்லார்களே.''

—திருஞானசம்பந்த சுவாமிகள்

## பதில்மனு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குமூலத்தில், தான் எந்த ஒப்பந்தத்தின் சட்டங்களையும் மீறிய குற்றத்தைச் செய்யவில்லையென்றும், தான் இந்த வழக்கிற் குற்றவாளியல்ல என்றும், தான் குற்றவாளி அல்ல என்பதை நிரூபிக்க பல சாட்சிகளை ஒழுங்குசெய்ய வேண்டியிருப்பதால் தவணை தருப்படியும் கோரினார்

இதைத்தொடர்ந்து குறுகிய தவணையே கொடுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு வேறுபல கடமைகளிருப்பதாகவும் பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிருர்.

தணிக்கைச் சபையின் அனுமதிபெற்றுத் திரையிடப்படும் படங்களிலேயே அபாசக்காட்சிகள் மலிந்திருப்பதுகண்டுபலரும்கவலையடைகின்றனர். இந்தப் படங்களைவிட முழுக்கமுழுக்கநிர்வாணக் காட்சிகளைக் கொண்ட மிகக்கீழ்த்தரமானதிரைப் படங்கள் மிக இரகசியமாக நாட்டின் சிலபகுதிகளில் திரையிடப்படுவதும் இது ஓர் இயக்கமாகவே இயங்கிவருவதும் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க நிச்சயம் உதவாது இது பெரும் இடையூறுமாகும். இந்தப் படங்கள் வெளிநாடுகளிலிருந்து இங்குஎப்படியோ நுழைந்துவிடுகின்றன. இதேசமயம் இங்குள்ள இளம் பெண்களுக்கும் ஆசைகாட்டி, வசப்படுத்தி இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் இதுபோன்ற படங்களைத் தயாரித்து படங்களில் வரும் ஆபாசக்காட்சிகளையும் அந்தப் படங்களில் தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளையும் சுவரொட்டி விளம்பரங்களில் காட்டுவதை இந்தியாவில் விளுேபாஜி தலைமையில் பலர் எதிர்த்து இயக்கம் தொடங்கியதால் அதுசில இடங்களிலாவது ஓரளவு வெற்றியீட்டிக் கொடுத்தது தமிழ் நாடு சட்டசபையிலும் கூட ஆபாச சுவரொட்டிகள் பற்றி ஒரு தடவை விவாதிக்கப் பட்டது.

ஆபாச சுவரொட்டிகள் விளம்பரங்களுக்கு பெண்கள் குறிப்பாக மாதர் சங்கங்கள் பெரிய அளவில் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். மற்றும்பொது நலஸ்தாபனங்களும்இதில் தீவிரமாக ஈடுபடுவது அவசியம். இதேசமயம் ஆபாசத்திரைப் படங்களுக்கும் சுவரொட்டிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க புதிய சட்டம் கொண்டுவரப்படவேண்டியதும் அவசியமாகும்.

"கோப்பாய் ஆஸ்பத்திரி

# குடும்பத் திட்டப்பிரிவை அபிவிருத்தியாக்குக"

கோப்பாய், ஞாயிறு

சுகாதாரஅமைச்சின் பிரதிநிதியாக உங்கள் முன்வந்து இந்த வார்ட்டைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்வடைகிறேன். இந்த ஆஸ்பத்திரியின் வளர்ச்சி கண்டும் வைத்தியத்திறன் கண்டும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் பாராட்டுகிறேன்.

இவ்வாறு கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியின் புதிய ஆண் நோயாளர் விடுதியைத் திறந்து வைத்துப் பேசுகையில் சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. சி. பாலசிங்கம் கூறினுர்.

இவ்விழா கோப்பாய் வடக்கு கி.மு.ச.தலைவர் திரு. கே,ஆர.குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. வலி. கிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினுர்.

திரு. பாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில், 'இவ் வைத்தியசாலையின் தேவைகள் பற்றி நான் அறிந்துள்ளேன். எமது அமைச்சு கடந்த மூன்று ஆண்டுகாலங்களில் எந்தவொரு புதியகட்டட விஸ்தரிப்பு, நன்னீர் வசதி, மலசலகூட வசதி ஆகியவை அடங்கிய மகஜர் ஒன்றும் திரு. பாலசிங்கத்திடம் சமர்ப்பிக்கப் பட்டது.

திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கவில்லை. நிதி நிலைமையைப் பொறுத்தே இவ்வபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும் என்ருர்.

அடுத்து கோப்பாய் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் எந்தவொரு விஷயத்தையும்நாம் ஒற்றுமையுடன் செய்வோமாளுல் நல்ல முறையில் அவை செயற்படமுடியும் இன்று இந்த வைத்தியசாலை திறமையுடன் இயங்குவது எமது ஒற்றுமையின் காரணமாகத்தான் என்று குறிப்பிட்டதோடு இவ்வைத்தியசாலைக்கு வருங்காலத்தில் திறமையான வைத்தியர்களை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

குடும்பக்கட்டுப் பாட்டுக்கான வைத்தியப் பிரிவை இவ் வைத்தியசாலையில் மேலும் அபிவிருத்தியடையச் செய்வதில் அமைச்சு அதிக கவனம் எடுக்க வேண்டுமென கோப்பாய் கி. ச. தலைவர் திரு. தி. பரமானந்தராசா பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

கோப்பாய் பகுதி பொதுமக்கள் சார்பில் ஆஸ்பத்திரி

பீயூட்டர்ஸ் கோப்பரேசன், 4[illegible] பாங்சால் வீதி, கொழும்பு-11 ரூ 25-00

எம் எஸ் லிங்கம், 1209, மருதானைவீதி, பொரளை ரூ 25-00

வ விசுவலிங்கம், 7, ரைபிள்வீதி, கொழும்பு-2 ரூ 10-00

கே இராஜேந்திரம், 129 5ம்குறுக்கு தெரு கொழும்பு-11 ரூ 10-00

செல்வரட்ணம் ஸ்டோர்ஸ், 13, ஒல்ட்புச்சர்ஸ் வீதி, கொழும்பு-11 ரூ 10-00

வி ஜெகநாதன், சரஸ்வதிஸ்டோர்ஸ், 12, ஆதம்மலி பில்டிங், கொழும்-11 ரூ 11-00

மணியம் ஸ்டோர்ஸ், 1217, மருதானைவீதி, பொரளை ரூ 10-00

ஆஸி டிரேடர்ஸ், 14, மெலிபன் வீதி, கொழும்பு-11 ரூ 10-00

மு க. 73, 5ம்குறுக்குத்தெரு, கொழும்பு-11 ரூ 10-00

கே பொன்னம்பலம் அன் கோ, 49, 5ம் குறுக்குத்தெரு கொழும்பு-11 ரூ 10-00

எம் முத்தையாபிள்ளை, எண்ணைக்கடைப் பகுதி, 47 5ம் குறுக்தெரு, கொழும்பு-11 ரூ 10-00

சோமா, 131 5ம் குறுக்குத்தெரு கொழும்பு- 11 ரூ 10-00

கணேசா, ஸ்டோர்ஸ், 238 சம்மாங்கோடு கொழும்பு-11 ரூ 5-00

ஆர் கபிரியேல்பிள்ளை 108/5, பெல்மண்ட வீதி, கொழும்பு 12 ரூ 500

சு தியாகராசா ஐயாத்துரைகுமாட, 161 மலேவீதி கொழும்பு- 2 ரூ 5-00

ஏ கே பிச்சை 154, ஸ்ரீசங்கராஜ மாவத்தை கொழும்பு- 10 ரூ 5-00

எஸ். பாலேந்திரா 8, பூந்தோட்டம், வீதி கொழும்பு-11 5-00

றன்ஜஹ கபே 125, 5-ம் குறுககுத்தெரு கொழும்பு. 5-00

ஐய்யம் பெருமாள் அன் கோ 127, 5-ம் குறுககுத்தெரு கொழும்பு. 5-00

ஹொட்டல் டீகலா 33 செட்டியார் தெரு கொழும்பு. ரூ 5-00

சி. ராமசந்திரன் 1213 மருதானை ரோட, கொழும்பு, பொறளை 5-00

கே சதாசிவம், 1213, மருதானை, ரோட் கொழும்பு பொறளை 5-00

சி அருளானந்தம், 16, கொட்டா தெரு பொறளை 5-00

அன்வர் 8, வெலிகந்தை, கண்டி 5-00

ஆ புவனேந்திரநாதன் 1213, மருதானை கொழும்பு 5-00

எஸ் இராமநாதன் 1217, பொறளை கொழும்பு 5-00

மருதானை கபே 5, பஞ்சிகாவத்தை ரோட் மருதானை கொழும்பு 5-00

மணியம் ஸ்டோர்ஸ் 37 பஞ்சிகாவத்தை ரோட் மருதானை கொழும்பு 5-00

நியூ தவளகிரி ஹொட்டல் 467, 2-வது மருதானை கொழும்பு 5-00

நாதன் ஸ்டோஸ் 331, முதலாவது மருதானை கொழும்பு 5-00

நியூ நேசனஸ் ஸ்டோர்ஸ் 225 ஐந்தாம் குறுக்குத் தெரு கொழும்பு 5-00

எம் சங்கரப்பிள்ளை அன் சன் 11, சென் யோன்ஸ் ரோட் கொழும்பு 5-00

எம் அருளானந்தம் நியூ லீலா அச்சகம் கொழும்பு-12 5-00

இ இலட்சுமிகாந்தன் பொறளை 3-00

எஸ் பாலசுந்தரம் 1. பேஷ்லைன் ரோட கொழும்பு 2-00

பி முதலி தம்பி வேலணை 5 2-00

குணரத்தினம் 17, பஞ்சிகாவத்தை ரோட கொழும்பு 2-00

மு சின்னத்துரை 23, பஞ்சிகாவத்தை ரோட கொழும்பு 2-00

அன்பர் 19, பஞ்சிகாவத்தை ரோட் 1-00

கொழும்பு-12 ரூ 5-00

செ, சங்கரலிங்கம், 33, சென் செபஸ்தியான் மேடு, கொழும்பு-12 2 00

எம். பி, அப்துல் ஹுசேன் அன் சன்ஸ், 20/22 நாலாம் குறுக்குத்தெரு, கொழும்பு ரூ 5-00

சி. அருளானந்தம், லீலா ஸ்டோர்ஸ், 249, நலகொடபிவத்தை, கொழு[illegible] ரூ 5-00

வே. பாலசிங்கம், நியூலீலா அச்சகம், கொழும்பு ரூ 3-00

எஸ். கயிலநாதன், நியு லீலா பிரஸ், சுந்தபஸ்தியன் ஹில் கொழும்பு ரூ 2-00

பா சிவபாலன், 1-ம் குறுக்குத்தெரு. கொழும்பு ரூ 2-00

சுப்பீரியர் பளையகாட் அன்கோ, 118, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்பு ரூ 25 00

வைசா ரிறேடிங் கம்பெனி, நிர் 5, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11 ரூ 2-00

ஜின்ஞ மூஸ்தாபா மேற்பார்த்து, நிர் 5, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11 ரூ 2-00

கே பாலேந்திரன், 170, மலிபன் வீதி, கொழும்பு 11 ரூ 2-00

கார்த்திகேசு, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை ரூ 5-00

எட்வட்சிறிவர்த்தன, நியூ லீலா அச்சகம், கொழும்பு-12 ரூ 1-00

இதுவரை சேர்ந்த தொகை ரூபா 7219-37

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# திருக்குறள் நூல் ஆய்வு அரங்கு

## சைவமங்கையர் சபை நடாததும்

யாழ்ப்பாணம், திங்கள்

இந்துமகளிர்க்கென அமைந்ததும், சேர் பொன் இராமநாதனுல் ஆரம்பிக்கப்பட்டதுமான சைவமங்கையர் சபை தனது நிர்வாகசபைக் கூட்டத்தில் திருக்குறளையும் ஏனைய சங்கநூல்களையும் ஆராய்ந்து கற்கும் நோக்குடன் 'திருக்குறள் நூல் ஆய்வு அரங்கினை' இம்மாதம் 25ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு சுன்னுகம் இராமநாதன் கல்லூரியை அடுத்துள்ள இராமநாதன் அகத்தில் அங்குரார்ப்பணம்செய்வதென தீர்மானித்துள்ளது.

திருக்குறளில் ஆழ்ந்த பயிற்சிபெற்ற அறிஞர் குழுவின் உதவியுடன் திருமதி சகிதேவி கந்தையா அரங்கினை நடத்துவார் இவ்வரங்கு ஒவ்வொரு போயாமுன்தினமும் பிற்பகலில்நடைபெறும் இதனைத் தொடர்ந்து வட்டாரக் கல்விஅதிகாரி கா சோமசுந்தரத்தினுல் நாடகக்கலை பயிற்சி வகுப்புகளும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் மனையியற்கலைப் பயிற்சிவகுப்புகளும் நடாத்தப்படும் வகுப்புகளில் கலந்துகொள்ளவிரும்புபவர்கள் முழுப் பெயரையும் விலாசத்தையும் சபைக்காரியதரிசிகளான திருமதி சரஸ்வதி அப்பாத்துரை, இராமநாதன் கல்லூரி அல்லது திருமதி விஜயலக்ஷ்மி சண்முகசுந்தரம், 68 3-ம்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம்மாதம் 25ந் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளலாம்.

25ந் திகதி புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு தொடர்ந்து 'அன்னையா தினமும்' இராமநாதன் அகத்தில் நடைபெறும்

## பட்டாபிஷேக விழா

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாள் கோவிலில் சென்ற சனிக்கிழமை ஸ்ரீராமபட்டாபிஷேக விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் அபிஷேகமும் இரவு பட்டாபிஷேக திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன

பட்டாபிஷேக விழாவில் செந்தமிழ்மணி பொன் கிருஷ்ணபிள்ளை, வித்துவான் க கார்த்திகேசு ஆகியோரின் சொற்பொழிவும், கவிஞர் இ நாகராஜன் தலைமையில் கவியரங்கும் லயஞான குபேரபூபதி திரு. வி தெட்சணமூர்த்தி க வேசுகரஞானகேசரி திரு. வே கணேஷ், லிவகார வித்துகமணி திரு என் ஆர் சின்னராசா ஆகியோரின் தனித்தவில் கச்சேரியும் இடம் பேற்றன

தமிழரின் தலைநகராமென்று கூறக்கூடிய யாழ்ப்பாணத்தின் பொதுவாழ்விலே பங்கெடுத்து வருகின்ருர்.

இவ்வளவு அனுபவமும் திறமையும் மிக்க ஒருபெரியார், இலங்கை செனேட் சபையிலே அங்கம் வகிப்பது அச்சபையின் மதிப்பையும் புகழையும் உயர்த்தும், ஆனுல் ... ... ... ?

அவரது இந்த 81-வது பிறந்த நாளை இங்கு பொது மக்கள் போற்றிக் கொண்டாடவேண்டியது அவர்களது நன்றிக் கடமையாவதுடன். அது தங்களைத் தாங்களே கௌரவித்துக்கொண்டதாகும். ஆனுல் முதலியாரவர்கள் அதை விரும்பா

## கிரிக்கட் பரிசளிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்திய கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 177 ஓட்டங்களைப் பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் தெய்வேந்திராவும், செல்வநாயகமும் 18, 13 ஓட்டங்களைப் பெற்றனர். ரஞ்சிற்குமார், ஜெரட்ணகுமார், ஜெலிங்கம், பிரேமச்சந்திரன் ஆகியோர் முறையே 4, 2, 2, 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்

சென். ஜோன்ஸ் கல்லூரி தனது 2-வது இன்னிங்ஸை மிகவும் நிதானமாக துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது இக் கோஷ்டி தனது முதல் விக்கெட்டை 63 நிமிடங்களின் பின்னே இழந்தது, ஆனுல் 29 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. தேனீர் இடைவேளையின் சில மிடங்களின் பின் சென். ஜோன்ஸ் கோஷ்டி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 109 ஓட்டங்களைப் பெற்றது இதில் தேவபாலனும், பாலஜோதியும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி முறையே 35, 20 ஓட்டங்களைப் பெற்றனர். 2 வது இன்னிங்ஸில் பிரேமச்சந்திரனின் பந்து வீச்சே மத்திய கல்லூரியின்வெற்றிக்கு வழிவகுத்தது எனக்கூறலாம் இவர் 37 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்திஞர். ரஞ்சிற்குமார், மகேநதிரன் தலா 2 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சென்றல்-சென். ஜோன்ஸ் கிரிக்கெட போட்டியில் 1960-ம் ஆண்டுக்குப் பின்னர் அதாவது 10 வருடங்களுக்குப் பின்னர் சென்றல் கல்லூரி வெற்றியை தனதாக்கிக் கொண்டுள்ளது.

### பரிசுபெற்றவீரர்விபரம்

இந்த 72-வது கிரிக்கெட போட்டியில் பரிசுபெற்ற வீரர்களின்விபரம்வருமாறு.

சிறந்தபந்துவீச்சுவீரர்: கே பிரேமச்சந்தரன் (மத்திய கல்லூரி)

சிறந்த துடுப்படிவீரர்: ரி. மகேந்திரன் (மத்திய கல்லூர்)

சிறந்த பந்து தடுப்புவீரர்: ரி. தேவபாலன் (சென். ஜோன்ஸ் கலலூரி)

எலலாத்துறைகளிலும்சிறந்த வீரர். றஞ்சிற்குமார் (மத்தியகலலூரி)

தே. நி)

என்பதை நிரூபிக்க பல சாட்சிகளை ஒழுங்குசெய்ய வேண்டியிருப்பதால் தவணை தருப்படியும் கோரினுர்

இதைத்தொடர்ந்து கூறுகிய தவணையே கொடுக்கப்படவேண்டும் என்று வாதி தரப்பு அட்வகேட் வாதாடியும், நீதவான் ஏப்ரல்மாதம் 18-ந் திகதிவரை மேல் விசாரணையை ஒத்திவைத்தார் அதுவரை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் வழமைபோல் திருவிழாவும் பூசையும் நடைபெறும்.

பண்டத்தரிப்பு

## கிராமசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாலைதீவு உற்சவத்தின் போது யாத்திரிகர்கட்கு ஏற்பட்ட அகால மரணத்தையிட்டு பண்டத்தரிப்பு கிராமசபை இருநிமிட மௌனம் அனுஷ்டித்ததுடன், மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு நேரில் அனுதாபம் தெரிவிக்க முடியாததையிட்டு கவலைதெரிவிப்பதென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org